வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com


THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING

WELLA வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.

Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

இதழ் - 4 | 16.06.2023 - 22.06.2023 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | விலை : ரூ.50.00

## எரிந்து கொண்டிருக்கும் தமிழர் தாயகத்தில்

# பிரிந்து நிற்கும் தமிழ்க் கட்சிகள்

## ஒற்றைக் கோரிக்கையிலாவது ஒன்றுபட முடியாதா..?

# சம்பந்தனுக்கு ஒரு சவால்! சந்திப்பாரா பெரியவர்?



யுத்தம் முடிந்து 14 வருடங்கள் பறந்தோடிவிட்ட பின்னரும் கூட, தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கும் பாரிய பிரச்சனைகளில், எதற்கும், நீதியான தீர்வு இதுவரையில் தென்படவில்லை.

போரின் இறுதிக்கட்டத்தில், விடுதலைப்புலிகள் முடக்கப்பட்டிருந்த முல்லைத்தீவுப் பிரதேசத்தில், மும்முரமாக முன்னேறிக் கொண்டிருந்த சிறீலங்கா அரச படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரம் தமிழ்ப் பொதுமக்களின் படுகொலைகள் பற்றிய விவகாரம், இப்பொழுதும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றத்திலும், மற்றும் சர்வதேச அரங்கிலும் அவ்வப்போது

பக்கம் 09

# மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாக சித்தரிக்கும் பண்பு

## தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டது

# விக்கினேஸ்வரன் எம்.பி!!






பக்கம் 11

தம்மில் இருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களை துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவராகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதோவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டதாக சுட்டிக்காட்டியுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாக சித்தரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## சரத் வீரசேகரவின் சண்டித்தன அரசியல் சந்திக்கப்போவதும், சாதிக்கப்போவதும் என்ன?



"பொலீசாருடன் சண்டித்தனம் காட்டும் அளவிற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினருக்கு துணிவு வந்துள்ளது. பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி எதனையும் சாதிக்கலாம் என்று கஜேந்திரகுமார், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள். இது அவர்களின் அறியாமை.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்ததற்கு எல்லாம் உணர்ச்சி வசப்பட்டு துள்ளிக் குதிக்காமல் இருக்க வேண்டும். அவர்கள் அடக்கி வாசிக்க வேண்டும் இல்லையேல் சிறையில் தான் அடைக்கப்படுவார்கள். இப்படியானவர்களை கைது செய்து பிணை வழுங்காமல் சிறையில் தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்ச்சவடால் பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி எடுபடாது.

முதலில் அவர்கள் சட்டம் ஒழுங்கு தொடர்பில் நன்றாக தெளிவடைய வேண்டும்..."

ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர மேற்கண்டவாறு கொக்கரித்திருக்கின்றார்.

கடற்படையின் முன்னாள், றியர் அட்மிறல் தரதளபதி நிலை அதிகாரியும், முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகரவின் இனவெறிப் பேச்சுக்கள், வடக்கே பருத்தித்துறை முதல் தெற்கே தெய்வேந்திர முனை வரை நன்கு அறியப்பட்டவை.

பாம்புக்கு பல்லில்தான் விஷம். ஆனால், சரத்வீரசேகர போன்ற சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கோ, உச்சி முதல் உள்ளங்கால் வரையில் இன வெறி எனும் கொடியவிஷம் ஊறிப்போயிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் தயவில், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் பெரும் வெற்றியடைந்த இந்த நவீன துட்டகைமூனு- சரத்வீரசேகர சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்கூச்சல்களை தொடர்ந்து எழுப்பி வருகின்றார்.

சமீபத்தில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போது, இனக்குரோதத்தை தூண்டும் விதத்தில் சரத்வீரசேகர தெரிவித்த கருத்துக்கள் மிக மோசமானவை.

சிங்கள மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்று திரும்பத் திரும்ப அவர் தெரிவித்து வரும் கருத்துக்கள் மிக விஷமத்தனமானவை.

இனக்குரோதத்தை தூண்டும் விதத்தில், பகிரங்கமாக இவர் வெளியிட்டு வந்திருக்கும் கருத்துக்களுக்காக, சர்வதேச
குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் கீழ் இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எவரும் குற்றப்புகார்செய்ய முடியும்.

இத்தகைய முறையீடு செய்யப்பட்டால், பொலீசாரின் புலன்விசாரணைக்குப் பின்னர், வழக்கு தொடுக்கப்பட்டு, இவர் விளக்கமறியலில் வைக்கப்படவும் சட்டத்தின் கீழ் வலுவான சாத்தியம் உள்ளது.

அவ்விதம் நிகழ்ந்தால் நீதிவான் நீதிமன்றில் பிணை கோரமுடியாது. மேல் நீதி மன்றின் கதவுகளையே பிணைகோரி தட்ட வேண்டியிருக்கும்.

அங்கும் பிணை பெறுவது என்பது சட்டத்தின் கீழ் சுலபமானது அல்ல.

இத்தகைய சூழ்நிலைக்குள் சிக்கக்கடிய ஒருவர் தான், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, சட்டம் – அரசியல் எடுக்க முனைந்துள்ளார்.

இது மிகவும் வேடிக்கையானது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சம்பந்தப்பட்ட மருதங்கேணி சம்பவம் தொடர்பில், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில், அவருக்கும் மற்றும் இருவருக்கெதிராக, பொலீசாரால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், தனது கைது தொடர்பில் பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எழுப்பிய சிறப்புரிமை பிரச்சனை, பாராளுமன்ற ஒழுங்கு விதிகளின் கீழ், அதன் சிறப்புரிமைக் குழுவின் பரிசீலனைக்கும், நடவடிக்கைக்குமாக சபாநாயகரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த இரண்டு விடயங்களும், விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவை என்பதை நன்கு தெரிந்து கொண்டும், சரத் வீரசேகர, அவற்றைப் பற்றி வழக்கம் போல பேசிக்கொண்டிருக்கின்றார்.

நேற்று முன்தினம் அரசியலுக்கு வந்த இவரும். இவரை போன்றவர்களும் ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

சிங்கள பௌத்த இனவெறி கூச்சல்களையும், கோஷங்களையும் காலத்திற்கு காலம் எழுப்பிய, பேரினவாத இனவெறியர்கள் பலர், கடைசியில் சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் அநாதைகளாகி, காணமல் போயிருக்கின்றார்கள்.

**கே.எம்.பி. ராஜரதின,**
**ஆர்.ஜீ. சேனநாயக்க,**
**பிலிப் குணவர்த்தன,**
**சி.பி.டீ. சில்வா,**
**ஐ.எம்.ஆர்.ஏ இறியகொல்ல,**
**சிறில் மத்தியூ,**
**டொக்ரர். நெவில் பெர்னாண்டோ,**
**சுனில் ஜயக்கொடி,**
**எஸ்.எல். குணசேகர,**
**ஹெமகுமார நாணயக்கார என்று நீளும் இந்த "காணாமற்போனோர்" பட்டியலில் சரத்வீரசேகரவும் கட்டாயம் இடம் பெறுவார் என்பதை சொல்லி வைக்க விரும்புகின்றோம்.**

அதே நேரத்தில், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, நேர்மைத் துணிவுடன் குரல் கொடுத்து, தமது அரசியல் எதிர்காலத்தையே தொலைத்த எட்மண்ட் சமரக்கொடி,

மெரில் பெர்னாண்டோ மற்றும் விக்கிரமபாகு கருணாரத்தின போன்ற சில சிங்கள இடதுசாரித் தலைவர்களை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்ததில்லை என்பதை கூறிக்கொள்ள விழைகின்றோம்.

இறுதியாக, சரத் வீரசேகரவுக்கு ஒரு வேண்டுகோள்! எதிர்காலத்தில், கஜேந்திரகுமார் மற்றும் ராசமாணிக்கம் சாணக்கியன் போன்ற இளம் தமிழ் அரசியல்வாதிகள் பெரும் தலைவர்களாக, தமிழ் மக்கள் மத்தியில் உருவெடுக்க வேண்டும் என அவர் விரும்பினால், அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் அப்பட்டமான இனவெறிப் பேச்சுக்களை பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறமும்
அவர் தொடர்ந்து நிகழ்த்தி வந்தால்
அதுவே போதுமானது.

**ஆசிரியர்**

# இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்கள்?

ஈழத்தமிழர்களை ஏமாற்றி பிழைப்பு நடத்துவது சிங்கள தலைவர்களுக்கு கைவந்த கலையாகும். கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களுக்கு வாக்குறுதிகளை கொடுத்துவிட்டு, மறுநிமிடமே அவற்றை குப்பையில் போடும் அரசியலுக்குள்ளேயே பழகிப்போன சிங்கள தலைவர்கள் இன்று தமிழர்களுடன் சேர்த்து சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் காரியத்தை கச்சிதமாக செய்துவருகிறது. குறிப்பாக தமிழர்களுடைய ஆயதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு தமிழ் மக்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் முன்வைக்கும் கோரிக்கைகளையும் இந்தியா முன்வைக்கும் கோரிக்கைகளையும் துச்சமாக கருதி அவற்றை செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று உதாசீனப்படுத்துவதில் இலங்கை தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவரில்லை என்பதை நிரூபித்து வந்திருக்கிறார்கள். எந்த காரணத்துக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி 30 வருடங்கள் போராடினார்களோ, அதே காரணங்கள் மீண்டும் தமிழர் தேசத்தில் தலை தூக்க தொடங்கியிருக்கிறது.

தமிழ் மக்களுடைய தாயகத்தை சிங்கள-பௌத்த மயமாக்கல், ஒடுக்குமுறைகள், இராணுவம்-பொலிஸாரை குவித்து வைத்துக்கொண்டு எந்நேரமும் தமிழர்களுடைய நடவடிக்கைகளை கண்காணித்துக்கொண்டு அவர்களுடைய சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துதல், சாத்வீக ரீதியில் தங்களுடைய உரிமைக்காக போராடுபவர்களை அச்சுறுத்தும் வகையில் அவர்களை கைது செய்தல் மற்றும் துப்பாக்கி முனையில் அச்சுறுத்துவது என தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த காரணமான அனைத்து நடவடிக்கைகளும் மீண்டும் மீண்டும் துளிர்விட ஆரம்பித்திருக்கிறது. அதைவிட இனவாதிகளின் பார்வை நாளுக்கு நாள் தமிழர் தேசத்தின் மீது வீழ்வது அதிகரித்துவருகிறது. இவை ஒருபுறமிருக்க அண்மையில் தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 229 ஏக்கர் காணியை விடுவிப்பது குறித்த பேச்சில் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்கவை ரணில் கடுமையாக சாடிய விடயம் தற்பொழுது தமிழர் தேசத்திலும் தென்னிலங்கையில் பேசுபொருளாக மாற்றப்பட்டிருக்கிறது.

காணி ஒதுக்கீடு பிரச்சினை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை கடுமையாக சாடியிருந்த அதேவேளை,"நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கின்றீர்களா? அல்லது நான் உங்களுக்கு கற்பிக்க வேண்டுமா ? என ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பியிருந்தார். இது தென்னிலங்கை இனவாதிகளை கொதிப்படைய வைத்திருப்பதுடன், ஆளாளுக்கு ரணிலை வசைபாடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை, ஏதோ சாதித்துவிட்டதாக தமிழரசு கட்சியினர் ஊடக சந்திப்புகளை நடத்தி துள்ளிகுதிப்பதையும் அவதானிக்க முடிகிறது. உண்மையில் இங்கு நடந்தது ரணிலின் தந்திர விளையாட்டே.

இலங்கை இன்று எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளை சமாளிப்பதற்கு சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்கு ரணில் எதையாவது செய்துகொண்டிருக்க வேண்டிய சூழலில் இருக்கிறார். அதேவேளை, மிக விரைவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா பயணமாகவிருக்கிறார். அங்கு செல்லும்பொழுது புதுடில்லியை திருப்திப்படுத்தும் வகையில் ஒரு செய்தியை அவர் கொண்டுசெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். அதற்காகவே ரணிலின் நாடகத்தில் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் வில்லனாக்கப்பட்டிருக்கிறார். அதேபோல், இனவாதிகளின் எதிர்ப்பையும் அவர் செய்தியாக புதுடில்லிக்கு கொண்டு செல்லவிருக்கிறார். ஒரு காணி விடுவிப்பிலேயே இத்தனை எதிர்ப்புகள் இருக்கிறதென்றால் 13, மற்றும் தீர்வு விடயங்களில் எவ்வாறான எதிர்ப்புகள் இருக்கும் என்பதை புதுடில்லிக்கு முகம்கொடுக்க இந்த விவகாரம் ரணிலுக்கு போதுமானதாக இருக்கக்கூடும். தன்னுடைய அதிகாரங்களை பயன்படுத்தி செய்யக்கூடிய விடயங்களையே செய்ய முடியாத ஒரு தலைவர் இவ்வாறு நாடகமாடுவதையே புரிந்துகொள்ள முடியாத தலைவர்களிடம் தான் தமிழ் மக்களின் எதிர்காலம், இருப்பு, நிகழ்காலம் என்பன கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட மக்கள் சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.



### யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பு : ஊற்று முன்னோடி ! கிளிநொச்சி பொறியியல் பீடத்தை உருவாக்கிய அறிவாளி !!

# மண்ணின் மகுடமான மாமனிதர் பேராசிரியர் துரைராசா!

1988 செப்டெம்பர் மாதம் ஈழத்தில் கொடூரமான போர்ச்சூழல் காரணமாக எவரும் வரத் தயங்கிய தருணம் துணிச்சலுடன் யாழ் பலகலைக்கழகத்தின் துணைவேந்தராக இன்முகத்துடன் ஒருவர் பதவியேற்றார். அவர் யாருமல்ல, மண்ணின் மகுடமான மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா தான்.

அவர் பதவியேற்க நிபந்தனையாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீடம் ஆரம்பிக்கபடும் என்ற கொடுத்திருந்த வாக்குறுதியை பெற்றுக் கொண்டே அவர் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய தமிழ் மண் போற்றும் பேராசான் துரைராசாவின் நினைவு தினம் 1994 ஜீன் 11 ஆகும்.

## கிளிநொச்சி அறிவியல் நகரில் பொறியியற் பீடம்:

199களில் யாழ்ப்பாணம் பொருளாதார சிக்கலில் தவித்திருந்த பொழுது, எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவரே மாமனிதர் பேராசான் துரைராசா.

தமிழ் பேசும் மக்கள் நற்சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளியார் கற்கைபோன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாண சமூகத்தை அறிவு கூட்டி பல்கலைக் கழகம் வரைகொண்டு வந்தவர்.

வடக்குக் கிழக்கு மலையகத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாக இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவியதில் முதன்மை வகித்தவரும் அவரே.

> **“(யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய தமிழ் மண் போற்றும் பேராசான் துரைராசாவின் நினைவு தினம் 1994 ஜீன் 11 ஆகும்)”**

ஆனாலும் பேராசிரியரின் பெருங்கனவு பல வருடங்களின் பின்பே கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீட அங்குரார்ப்பண நிகழ்வுடன் பூர்த்தியாகியது எனலாம்.

பேராசிரியர் அவர்கள் 1994 ஆம் ஆண்டு விழி மூடும் வரை, கொடிய நோயின் பிடியில் அவர் அகப்பட்டு இருந்தாலும், யாழ் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில், பேராசான் வதிவிடமான வடமராட்சியின் வதிரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு வல்லை வெளியினூடாக போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலங்களில் 30 ற்கும் மேற்பட்ட கிலோமீட்டர்கள் தூரத்தை மீதி வண்டியினூடே பயணித்திருந்தார். மக்களின் துன்ப துயரங்களை தன் தோளில் சிறந்த மண்ணின் பற்றாளர் அவர்.

## வீர வடமராட்சியின் மைந்தன்:

மாமனிதர் பேராசான் துரைராசா யாழ்ப்பாணத்தின் மூளை என்றழைக்கபடும் வடமராட்சி பிரதேசத்தில் பிறந்தார். யாழ்ப்பாணம் வடமராட்சியில் கம்பர்மலை என்னும் ஊரிலே, இமையாணனைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அழகையா - செல்லம்மா ஆகியோருக்கு 1934 நவம்பர் 10 இல் தமிழ் மண்ணில் அவதரித்தார்.

இளமையில் ஆரம்பக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும், கற்று, 1953 ஜீலையில் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அதன்பின் குடிசார் பொறியியலில் 1957 ஆம் ஆண்டில் இளமாணிப் பட்டம் பெற்றார். 1958 மார்ச் வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி, நான்கு மாதங்கள் பொதுப்பணித் திணைக் களத்தில் இளைய பொறியியலாளராகப் பணியாற்றினார்.

புலமைப்பரிசில் பெற்று பேராசிரியர் கென்னத் ரொசுக்கோ வழிகாட்டலில் கேம்பிரிச்சுப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்தார். 1958 அக்டோபர் முதல் 1961 திசம்பர் வரை துரைராசா மண்ணின் வெட்டுப் பண்புகள் பற்றிய ஆய்வில் ரொசுக்கோவிற்கு பாரியளவில் உதவினார்.

## இங்கிலாந்தில் முனைவர் பட்டம்:

இந்த ஆய்வின் மூலம் 1962 ஜீன் மாதத்தில் ”கயோலின் மற்றும் மணலின் சில வெட்டுப் பண்புகள்” என்ற தலைப்பில் பேராசான் துரைராசாவிற்கு முனைவர் பட்டம் கிடைத்தது.

முனைவர் பட்டம் பெற்ற துரைராசா இலங்கை திரும்பும் முன்னர் இலண்டனில் 1962 இல் டெரிசர்ச் என்ற நிறுவனத்தில் சிறிது காலம் பணிபுரிந்தார். பின்னர் பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1971 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியல் பேராசிரியராக ஆவதற்கு முன்பு கனடா, வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மே 1975 முதல் செப்டம்பர் 1977 வரையும், பின்னர் பெப்ரவரி 1982 முதல் பெப்ரவரி 1985 வரையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி இருந்தார்.

## கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர்:

அக்டோபர் 1977 முதல் டிசம்பர் 1978 வரை பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். ஏப்ரல் 1987 முதல் ஆகஸ்ட் 1988 வரை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தார்.

போர் தீவிரம் பெற்ற தாயக மண்ணில் 1988 செப்டம்பர் முதல் 1994 மார்ச் வரை துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். தனிப்பட்ட மருத்துவக் காரணங்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி கொழும்பு சென்று அங்குள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் சிறிதுகாலம் பணியாற்றினார்.1994 ஜீன் 11 அன்று இரத்தப் புற்றுநோயினால் ஏற்பட்ட இதய செயலிழப்பினால் கொழும்பில் காலமானார்.

## தாயக மண்ணில் மாமனிதர் விருது:

தமிழ்த் தாயக மண்ணில் பேராசான் ஆற்றிய பணிக்காக, இவர் இறந்த பின்னர் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

மண் போற்றும் மானுடவியலாளனான துரைராசா 1977 முதல் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்திலும், 1979 முதல் இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்திலும், 1985 மே முதல் ஐக்கிய இராச்சியத்தின் குடிசார் பொறியியல் நிறுவனத்திலும் உறுப்பினராக இருந்தார்.

1986 இல் இவர் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்தின் தலைவராகவும், அக்டோபர் 1989 முதல் அக்டோபர் 1990 வரை இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். இவர் மண் பொறியியலில் நிபுணராகவும் இருந்தார்.

## பேராதனை பல்கலைக்கழக “அக்பர் பாலம்”:

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் ‘அக்பர் பாலம்’ பேராசிரியர் துரைராசாவினால் அமைக்கப்பட்டது.

இப்பாலம் சிங்கள பேராசிரியர் ஒருவர் விட்ட சவாலை ஏற்று மகாவலிகங்கைக்கு குறுக்கே ஒரேயொரு தூணை எழுப்பி பேராசிரியரின் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்டது.

மேலும் பேராசிரியர் நினைவாக பேராசிரியர் துரைராசா கிண்ணம் எனும் சுற்றுபோட்டி வருடாவருடம் பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைகழகங்களுக்கிடையில் இன்றும் இடம்பெற்றுவருகிறது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் :

பேராசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், இலங்கை சிவில் பொறியிலாளர்கள் அமைப்பு, தேசிய விஞ்ஞான அக்கடமி என்பவற்றின் தலைவராகவும் இருந்து அளப்பெரும் சேவைகள் ஆற்றியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் அனர்த்தங்களில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முற்றிலுமாக சிதைவடைந்திருந்த போது, வெளிநாடுகள் சென்று கல்லூரியின் நிலையினை எடுத்துரைத்து அங்குள்ள பழைய மாணவர்களை ஒன்று திரட்டி நிதி சேகரித்து இன்றைய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நிமிர்ந்து நிற்பதற்கு பேராசிரியரே துணை புரிந்தார்.

இன்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் நூலகம் அமைந்த கட்டிடதொகுதி பேராசிரியரின் பெயராலேயே பேராசிரியர் துரைராசா கட்டிடதொகுதி என்றே அழைக்கபடுகிறது.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்:

1990 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட விவசாயத்துறை மாங்குளத்தில் நிறுவப்படவிருந்த பொறியியல் துறைக்கும், முல்லைத்தீவில் நிறுவப்படவிருந்த மீன்பிடித் துறைக்குமான பூர்வாங்க வேலைகள் பேராசிரியர் துரைராசா அவரது முயற்சியையும் பரந்த நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 1992 இல் உருவானதும் பேராசியரின் சிந்தனையில் தான். அதன் ஸ்தாபக தலைவரும் இவரேயாவார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த துறையை ஆரம்பிப்பதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்று அதனை நிர்வகிக்கத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அயராத முயற்சியால் பேராசிரியர் துரைராசா திரட்டிக் கொண்டார்.

மேலும், பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவர்களாக படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாத மாணவர்களின் நலன் கருதி வெளிவாரி நிலையத்தை பேராசிரியர் துரைராசா உருவாக்கி பயன் பெறச்செய்தார்.

## யாழ் குடா தரைக்கீழ் நீர் சேமிப்பு ஊற்று அமைப்பு:

1980 இல் ஊற்று என்ற அமைப்பை பேராசிரியர் துரைராசா உருவாக்கி, தலைவராக செயல்பட்டு தனது முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உருவாக்கி கிராம மக்களை முன்னேற்றினார்.

அத்துடன் யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 200 குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் ‘நோராட்’ நிறுவனத்தின் உதவியுடன் பேராசிரியர் துரைராசா மேற்கொண்டார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு, இந் நிறுவனமும் ‘கெயர்’ நிறுவனமும் இணைந்து அமுலாக்கிய உணவு உற்பத்தி திட்டத்தினையும், ‘போரூட்’ இன் உதவியுடன் காடு வளர்ப்பு திட்ட அறிக்கை தயாரிப்பு வேலைகளும் பேராசிரியர் துரைராசா அவரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன.


1990 ஆம் ஆண்டின் பின் வடபகுதியின் தன்னிச்சை பொருளாதார வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணர் குழுவிற்கு தலைமை தாங்கி அதனை வழிநடத்திச் செல்ல பல திட்டங்கள் பேராசிரியர் துரைராசா அவரால் தயாரிக்கப்பட்டன.

பேராசிரியர் துரைராசாவை போன்ற கனவான்கள் இம் மண்ணில் தோன்றுவது அரிது. பேராசிரியர் துரைராசா எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர். பெருமை அதிகாரம் இல்லாத மண்ணின் மனிதர்.

மாணவர்களானாலும் சரி, பொது மக்களாலும் சரி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் அவரை அணுகி தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதற்கு அவர் மூலம் தீர்வொன்றை காணக் கூடிய பிறரை மதிக்கும் நற்குணமே அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

## இறந்தும் இறவா மாமனிதர் பேராசிரியர் துரைராசா :

இறந்தும் இறவா மண்ணின் மகுடமாக மிளிர்ந்த மாமனிதர் என்ற அடைமொழி கற்பனையாக இருந்தாலும் அவ் அடைமொழி பேராசிரியர் அழகையா துரைராசாவின் பெயரின் முன்னால் இருக்கும்போது அது உயிரோட்டமாகவே இருக்கின்றது என அவரின் மாணவர் ஒருவர் எழுதிய வரிகள் காலங்கடந்தும் அவர் நம்முள் வாழ்கிறார் என்பதனை எடுத்துக் கூறுகிறது.




“தேசப்பற்றோடும், மக்கள் நேயத்தோடும் மண்ணுக்கு அவர் மகத்தான சேவை ஆற்றினார்.”

**நவீனன்**










# நோவா ககோவ்கா அணை உடைப்பு ! நோர்ட் ஸ்ட்ரீம் எரிவாயு குழாய் தகர்ப்பு !!

## உக்ரேன் சூழ்ச்சியும் : மேற்குலக போர் வெறியும் !!!

பாரிய சுற்றுச்சூழல் அழிவை ஏற்படுத்தியுள்ள ரஷ்யாவின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் உள்ள நோவா ககோவ்கா (Nova Kakhovka dam) அணையை தகர்த்தமை தொடர்பாக, இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி உள்ளன.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சமீபத்திய தாக்குதலில், கெர்சன் பிரதேசத்தில் உள்ள "ககோவ்கா ஹைட்ரோ எலக்ட்ரிக் அணை" தகர்க்கப்பட்டது.

### ஒருவரை ஒருவர் குற்றசாட்டு:

இந்த அணை முக்கியமாக கிரிமியா தீபகற்ப அணுமின் நிலையத்திற்கு நீர் வழங்கி வருகிறது. இந்நிலையில், நோவா ககோவ்கா ஹைட்ரோ எலக்ட்ரிக் அணையை ரஷ்யா தகர்த்துவிட்டதாக உக்ரைன் உடனடியாக குற்றம் சாட்டியுள்ளது.

ஆயினும் இந்த பெரிய நீர் அணை தகர்ந்து இடிந்து விழுந்ததற்கு உக்ரைனும் ரஷ்யாவும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி வருகின்றன. இந்த அணை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள கெர்சன் பகுதியில் உள்ளது. ரஷ்யாவால் நியமிக்கப்பட்டுள்ள இப்பகுதியின் மேயர், இது "பயங்கரவாதச் செயல்" என்றும் தெரிவித்துள்ளார்.

அணை இடிந்து விழும் நிலையில் உள்ளதால் கரையோர நகர மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு எச்சரிக்கப் பட்டுள்ளதால் அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது.

### ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள பெரிய அணை:

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு இந்த அணை மீதான தாக்குதலால் 24 கிராமங்கள் உடனேயே வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. 17,000 மக்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

நோவா ககோவ்கா அணை இடிந்து விழுந்ததையடுத்து, டினிப்ரோ ஆற்றின் அருகே உள்ள ரஷ்ய கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் சுமார் 42,000 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள கெர்சன் பகுதியில் நோவா ககோவ்கா அணை தகர்க்கப்பட்ட நிலையில், இதனால் ஏற்பட்டும் இயற்கை அழிவு அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

### நோர்ட் ஸ்ட்ரீம் எரிவாயு குழாய் தகர்ப்பு :

முழுமையான விசாரணை முடிவின் ஆதாரங்களை மேற்கோள் காட்டி, உக்ரேனிய சிறப்பு இராணுவ குழுவே 26 செப்டம்பர் 2022 இல் நோர்ட் ஸ்ட்ரீம் (Nord Stream pipeline sabotage) இயற்கை எரிவாயுக் குழாய்களில் தொடர்ச்சியான ரகசிய குண்டுவெடிப்புகளை தாக்குதலை நடாத்தியுள்ளன என்று தற்போது சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

26 செப்டம்பர் 2022 இல் நோர்ட் ஸ்ட்ரீம் (Nord Stream pipeline sabotage) இயற்கை எரிவாயுக்

> **(நோவா ககோவ்கா அணை தகர்க்கப்பட்டதா அல்லது நீண்ட கால பராமரிப்பு இன்றி உடைந்ததா பற்றிய தகவல்கள் வெளிவர முன்னரே, மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை குறிவைத்து குற்றம்சாட்டி உள்ளன. 2022 செப்டம்பரில் நோர்ட் ஸ்ட்ரீம் (Nord Stream pipeline sabotage) பால்டிக் நடுக் கடலில் இயற்கை எரிவாயு குழாய்களை உக்ரேனிய சிறப்பு இராணுவ குழுவே தகர்த்ததை அமெரிக்க பென்டகனும் தற்போது உறுதிப்படுத்தியுள்ளது. உக்ரேன் போர் சூழ்ச்சியையும்- மேற்குலக ஊடக பொய்மையை அலசுகிறது இந்த ஆக்கம்)**

குழாய்களில் தொடர்ச்சியான ரகசிய குண்டு வெடிப்புகளும் அதைத் தொடர்ந்து நீருக்கடியில் எரிவாயு கசிவுகளும் நிகழ்ந்தன. இரண்டு குழாய்களும் ரஷ்யாவிலிருந்து பால்டிக் கடல் வழியாக ஜெர்மனிக்கு இயற்கை எரிவாயுவைக் கொண்டு செல்வதற்காக கட்டப்பட்டன. மேலும் அவை ரஷ்ய அரசுக்கு சொந்தமான எரிவாயு நிறுவனமான காஸ்ப்ரோமுக்கு (Gas prom) சொந்தமானவை.

இந்த நாசவேலையின் பின்னணியில் உள்ள நோக்கங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. அவை விவாதத்திற்கு உரிய விடயமன்று. ஆனால் மேற்குலக ஊடகங்கள் திட்டமிட்டே உண்மையை மறைத்து, ரஷ்யாவை குற்றம் சாட்டின.

உக்ரைன் மீதான ரஷ்ய போரை அடுத்து ரஷ்யாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான பொருளாதார மோதல்கள் உச்சம் பெற்றன.

செப்டம்பர் 26 அன்று நோர்ட் ஸ்ட்ரீம் குழாய் 2ல் இருந்து வெடிப்பு முதலில் கண்டறியப்பட்டது. குழாயில் அழுத்தம் குறைவதாக அறிவிக்கப்பட்டது.

இயற்கை எரிவாயு டனிஷ் தீவான போர்ன்ஹோமின் தென்கிழக்கில் மேற்பரப்பில் வெளியேறத் தொடங்கியது. பதினேழு மணிநேரங்களுக்குப் பிறகு, நோர்ட் ஸ்ட்ரீம் 1 க்கு இதே நிலை ஏற்பட்டது, இதன் விளைவாக போர்ன்ஹோமின் வடகிழக்கில் மூன்று தனித்தனி கசிவுகள் ஏற்பட்டன.

பாதிக்கப்பட்ட மூன்று குழாய்களும் செயலிழந்தன. இரண்டு நோர்ட் ஸ்ட்ரீம் 2 குழாய்களில் ஒன்று இயங்கக்கூடியது என்பதை ரஷ்யா உறுதிப் படுத்தியுள்ளது. இதனால் நோர்ட் ஸ்ட்ரீம் 2 மூலம் ஐரோப்பாவிற்கு எரிவாயுவை வழங்க ரஷ்யா தயாராக உள்ளது.

போலந்தும் நோர்வேயும் டென்மார்க் வழியாக ஓடும் பால்டிக் குழாயைத் திறக்க முன்பு, நோர்ட் ஸ்ட்ரீம் குழாய்களைப் போல ரஷ்யாவிலிருந்து எரிவாயுவைக் கொண்டுவராமல், வட கடலில் இருந்து எரிவாயுவைக் கொண்டு வந்தன. கசிவுகள் சர்வதேச கடல் பகுதியில் (எந்த நாட்டினதும் கடல் பகுதி அல்ல), ஆனால் டென்மார்க் மற்றும் ஸ்வீடனின் கடல் எல்லைகளுக்குள் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன.

### அழிவை ஏற்படுத்தும் அச்சம் :

தற்போது நோவா ககோவ்கா அணையில் குண்டுவெடிப்பு ஏற்பட்டு பேரழிவாக வெள்ளம் பரவத் தொடங்கியது. நோவா ககோவ்கா அணையானது டினீப்பர் ஆற்றின் மீது கட்டப் பட்டுள்ளது. இது கெர்சன் நகருக்கு கிழக்கே 30 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த அணையின் உடைவு உள்ளூர் பகுதிக்கு பேரழிவை ஏற்படுத்தி உள்ளது.

இந்த அணை 30 மீட்டர் நீளமும் நூற்றுக் கணக்கான மீட்டர் அகலமும் கொண்டது. இது 1956 இல் ககோவ்கா நீர்மின் நிலையத்தின் கீழ் கட்டப்பட்டது. இந்த அணையில் சுமார் 18 கன கிலோ மீட்டர் தண்ணீர் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த அளவு தண்ணீர் அமெரிக்காவின் உட்டாவில் உள்ள பெரிய உப்பு ஏரியில் இருக்கும் தண்ணீருக்கு சமம் ஆகும்.

### மின் உற்பத்தி நிலைய நீர் வழங்கல் :

அணை உடைந்ததால் கெர்சன் உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. கெர்சனின் சில பகுதிகள் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உக்ரேனிய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன. அணையில் ஏற்பட்ட வெடிவிபத்திற்குப் பிறகு, கெர்சன் பிராந்திய தலைவர் குடியிருப்பாளர்களை வெளியேற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

2014 இல் ரஷ்யா உடன் இணைக்கப்பட்ட தெற்கில் உள்ள கிரிமியாவிற்கு இந்த அணை நீர் வழங்குகிறது. இது தவிர, ஐபோரிஜியா அணுமின் நிலையத்திற்கும் தண்ணீர் வழங்குகிறது. இந்த அணுமின் நிலையம் ஐரொப்பாவிலேயே மிகப்பெரிய அணு உலையாகும். ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையத்திற்கு ககோவ்கா அணையில் இருந்து தான் குளிரூட்டும் நீர் வழங்கப்பட்டு வந்தது.

### ஐபோரியா அணுமின் ஆபத்து:

அணையில் ஏற்பட்டுள்ள பாதிப்பால் 18 மில்லியன் கன மீட்டர் நீர் வெளியேறிவருகிறது எனவும், இதனால் கரையோரத்தில் உள்ள ஆயிரகணக்கான மக்களுக்கு வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள - ஐபோரியாவில் அமைந்துள்ள அணுமின் நிலையத்திற்கு இந்த நீர்த்தேக்கதில் இருந்தே குளிரூட்டுவதற்கு தேவையான நீர் வழங்கப்படுகிறது. இதற்குரிய நீர் வழங்கப்படாவிட்டால் அணுமின் நிலையம் பாதிக்கபடும் என கூறியுள்ள போதும் அணுமின் நிலையத்திற்கு ஆபத்து இல்லை என சர்வதேச அணு சக்தி கூட்டமைப்பு அறிவித்துள்ளது

### கஸ்கோவா டிப்ரோவா உயிரியல் பூங்கா வெள் ளத்தில்:

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள நதிக்கரையில் இருக்கும் கஸ்கோவா டிப்ரோவா உயிரியல் பூங்கா முழுவதுமாக வெள்ளத்தில் மூழ்கியது. இதனால், அந்த உயிரியல் பூங்காவில் இருந்த 300 விலங்குகளும் உயிரிழந்தன. சுமார் 44000 பேர் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். ஆயினும் இந்த எண்ணிக்கை உச்சத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேருந்துகள், ரயில்கள் மற்றும் தனியார் வாகனங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டது.

### சோவியத் காலத்தில் கட்டப்பட்ட அணை :

சோவியத் காலத்தில் டினிப்ரோ ஆற்றின் குறுக்கே 1956-ம் ஆண்டு 98 அடி உயரத்தில் 3.2 கி.மீ நீளத்தில் ககோவ்கா அணை கட்டப்பட்டது. இங்கு ககோவ்கா நீர்மின் நிலையமும் உள்ளது. கிரிமியன் தீபகற்ப பகுதி, ஐபோரிஜியா அணுமின் நிலையம் ஆகியவற்றுக்கு இந்த அணையிலிருந்துதான் தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது.

இந்த அணை தகர்த்து, இங்கிருந்து வெளியேறும் அபாய அளவை எட்டியுள்ளதால், ககோவ்கா பகுதியில் உள்ள பல கிராம மக்களை வெளியேற்றும் நடவடிக்கை தொடங்கியுள்ளதாக கெர்சன் ஆளுநர் தெரிவித்துள்ளார். மக்கள் தங்களின் முக்கிய ஆவணங்கள் மற்றும் செல்ல பிராணிகளுடன் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கக்கோவ்கா அணை சேதமடைந்துள்ளதால், 80 குடியிருப்பு பகுதிகள் தண்ணீரில் மூழ்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அணையில் தண்ணீர் வேகமாக குறைந்து வருவதால், ஐபோரிஜியா அணுமின் நிலையத்துக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. ஆனால் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக சர்வதேச அணு சக்தி நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அணை தகர்க்கப்பட்டதா அல்லது நீண்ட கால பராமரிப்பு இன்றி உடைந்ததா என்பது பற்றி இதுவரை முழுமையான தகவல்கள் வெளிவரவில்லை. ஆயினும் உக்ரைனும் ரஷ்யாவும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி கொண்டிருக்கின்றன. மேற்கத்திய நாடுகளும் ரஷ்யாவை குறிவைத்து குற்றம்சாட்டி வருகின்றமை வழமையே.

**ஐங்கரன்
விக்கினேஸ்வரா**

## இலங்கையில் காலடி வைக்கும் ரஷ்யா!




இலங்கையில் அணுமின் நிலையம் அமைக்க ரஷ்யா ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்காக ரஷ்ய ரொசாட்டம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் ஜனித லியனகே தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என ரஷ்யாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆலையின் கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கான ஒப்புதல் செயல்முறை விரைவுபடுத்தப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## சுமந்திரன், சாணக்கியன் தமிழீழ விடுதலை புலிகளுக்கு தேவையான சதி வேலைகளை செய்கின்றனர்: பேரினவாதி டான் பிரசாத்



சுமந்திரனும், சாணக்கியனும் புலிகளுக்க தேவையான சதி வேலைகளையே இலங்கையில் செய்கிறார்கள். இன, மத வாதப் பிரச்சினையை உருவாக்கி மீண்டும் நாட்டில் பிரிவினை வாதத்தை தோற்றிவிக்கப் பார்க்கிறார்கள் என சிங்கள கடும் போக்குவாதியான டான் பிரசாத், தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்த போதே சிங்கள கடும்போக்குவாதியான டான் பிரசாத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்துகொண்டிருந்தது.

இதன்போது, தொல்பொருள்கள் எனக்கூறி வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளை, தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்து வருவதைக் கண்டித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடுந்தொனியில் அதிகாரிகளுக்கு எச்சரித்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க பதவி விலகியிருப்பது இலங்கையில் பெரும் சர்ச்சையாக மாறியிருக்கிறது.

இந்த பதவி விலகலைத் தொடர்ந்து சிங்கள கடும்போக்கு வாதிகள் பலரும் ஜனாதிபதி மற்றும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

தொப்பிகல காட்டில் பௌத்த சிங்கள தொல்பொருள்கள் காணப்படுகின்றன. தற்போது இக்காட்டை நாசம் செய்து அத்துமீறி பலர் அங்கு குடியேறியுள்ளனர்.

இந்நாட்டின் இடங்களை ஆயுதங்களைப் பயன்படுத்தி பிரபாகரன் பறிக்கப் பார்த்தார். இதனை இராணுவ வீரர்கள் தடுத்தனர். பிரபாகரன் செய்ததைப் பாராளுமன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி சுமந்திரனும், இராசமாணிக்கமும் செய்யப் பார்க்கிறார்கள்.

வடக்குக், கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை அவர்கள் கேட்கிறார்கள். அதனை வழங்க முடியாது.

சுமந்திரன், சாணக்கியன் போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் முட்டாள் அல்ல. அவருக்கு இந்நாட்டின் புராதன சின்னங்கள் தொடர்பில் நன்கு தெரியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து விலக்கி, தங்களுக்கு தேவையான ஒருவரை நியமிக்கும் அவுக்குப் புலம்பெயர் தமிழர்களிடம் பணம் இருக்கிறது." எனவும் டான் பிரசாத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் ஒரு நாளில் ஒரே நேரத்தில் இரு இடங்களில் ஏட்டிக்கு போட்டியாக இரு இராஜாங்க அமைச்சர்கள் கூட்டம்

# அரச அதிகாரிகள் திக்குமுக்காட்டம்!!





மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு இராஜாங்க அமைச்சர்கள் இரு வெவ்வேறு இடங்களில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களை நடாத்தியதால் அரச அதிகாரிகள் எந்த கூட்டத்துக்கு சமூகமளிப்பது என தெரியாது திக்கு முக்காடிய சம்பவம் தொடர்பாக புத்திஜீவிகள் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

விவசாய அமைச்சினால் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு கூட்டம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக மண்டபத்தில் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையிலும்

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் வர்த்தக இராஜாங்க அமைச்சருமான எஸ்.வியாழேந்திரன் தலைமையில் காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக மண்டபவத்தில் இடம்பெற்றது

இந்த இரு வெவ்வேறு பிரதேசத்தில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் இரு அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களை இரு இராஜாங்க அமைச்சர்களும் ஏட்டிக்கு போட்டியாக நடாத்தியனால் சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகள் எந்த கூட்டத்திற்கு சென்று சமூகமளிப்பது என திண்டாடியதுடன் ஏதோ ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கி நிலை ஏற்பட்டது

ஏன் இவ்வாறு ஏட்டிக்கு போட்டியாக யாருடைய தேவைக்காக அவசரமாக இவ்வாறு இரு கூட்டங்களை நடாத்துவதற்கான காரணம் என்ன? இந்த கூட்டங்கள் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காகவா? அல்லது அரசியல் வாதிகளின் தேவைக்காகவா? என்ற கேள்வி எழுகின்றதுடன் குறித்த ஒரு கூட்டத்திற்கு சம்மந்தப்பட்ட அதிகாரி கலந்து கொள்ளவில்லை எனில் எவ்வாறு தீர்வு காண முடியும்.

எனவே ஏன் மக்களின் வரிப்பணத்தின் ஊடாக பெற்ற பணத்தை இவ்வாறு அரச அதிகாரிகள் கலந்து கொள்ள முடியாத கூட்டங்களை நடாத்தி ஏனைய அதிகாரிகள் பொது மக்களின் நேரங்களையும் பணத்தையும் வீணடிப்பது எதற்காக? என்ற கேள்வி எழுந்து நிற்கின்றதுடன் ஏதாவது ஒரு கூட்டத்தை முறையாக நடாத்தி மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு திட்டமிட்டிருக்கலாம் ஆனால் இவ்வாறு கூட்டங்களையே திட்டமிட்டு செயற்படுத்த முடியாத அரச நிர்வாகமும் அரசியல்வாதிகளும் எவ்வாறு மக்களுக்கு தீர்வு பெற்று தரமுடியும்?

இவ்வாறே அண்மை காலமாக மாவட்டத்தில் அபிவிருத்தி குழு கூட்டமோ அல்லது பிரதேச அபிவிருத்தி குழு கூட்டமோ நடைபெறும் போது அங்கு மக்களின் உண்மையான பிரச்சனைகளை உள்வாங்காது ஆளும் கட்சி எதிர்கட்சி அரசியல் வாதிகளுக்கிடையே கூட்டத்துக்கு சம்மந்தம் இல்லாது பிரச்சனைகளை தமது சுயநல அரசியலுக்காக வெறும் ஆக்கிரோசமாக இரு தரப்பும் பேசி சண்டை பிடிப்பதால் கூட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிடும்.

இதனால் குறித்த கூட்டத்துக்கு கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் கிராம அபிவிருத்தி கமநல சங்கங்கள் மீன்பிடி சங்கங்கள் போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது பிரதேசம் தொடர்பான குறைகளை முன்வைக்க முடியாது துர்ப்பார்க்கிய நிலையில் வீடு திரும்பிட வேண்டியுள்ளது என கடும் விசனம் தெரிவித்தனர்.

எனவே எதிர்காலத்தில் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்காகவே தான் இந்த அபிவிருத்தி குழுகூட்டம் என்பதை அரசியல்வாதிகள் அனைவரும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்றனர்.

## சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு

# யாழில் களமிறங்கும் இராணுவம்!



யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெறும் சட்டவிரோத செயற்பாடுகள், குழு மோதல்கள், சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல், கால்நடைகளை வெட்டுதல், மணல் கடத்தல் போன்றவற்றை தடுப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிக அவசியம் என புதிதாக பதவியேற்றுள்ள யாழ் மாவட்ட இராணுவ கட்டளை தளபதியிடம் எடுத்துரைத்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக புதிதாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம் பெறும் சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு தரப்பின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

மேலும் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிய நிலையில், சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பொருட்கள் களவாடப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே இராணுவத்தினர் அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல அளவீடு செய்யப்படாது பொதுமக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளது.

குறித்த காணிகளையும் விரைவில் அளவீடு செய்யும் நடவடிக்கையில் உரிய சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் இராணுவத்தினர் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குறிப்பாக மீள்குடியேறிய மக்களுக்கு இராணுவத்தினரால் 700க்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரின் பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்டுள்ள அதே போல் எதிர்வரும் காலத்திலும் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டுத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்ய இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என வும் தான் கோரியதாகவும் தெரிவித்தார்.

தேசியம் www.thesiyamnews.com THESIYAM



# மருதங்கேணியில் நடந்ததும் அதன் விளைவும்

புலனாய்வுத்துறை தமிழ்மக்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது என்பது கடந்த பல தசாப்தகால யதார்த்தம்.குறிப்பாக கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எல்லா நடவடிக்கைகளையும் புலனாய்வுத்துறை கண்காணித்து வருகின்றது. அதை அவர்கள் நேரடியாகவும் செய்கிறார்கள் மறைமுகமாகவும் செய்கின்றார்கள். அச்சுறுத்தலாகவும் செய்கின்றார்கள் நாகரீகமாகவும் செய்கின்றார்கள். எதுவாயினும், தமிழ் மக்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் இல்லை.ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. தமிழ்மக்களை தொடரச்சியாகக் கண்காணிப்புக்குள் வைத்திருப்பது என்பது ஆக்கிரமிப்பு மனோநிலைதான்.

மருதங்கேணியிலும் அதுதான் நடந்தது. அதன் விளைவாக நடந்த கைது நடவடிக்கைகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை அச்சுறுத்தும் நோக்கிலானவை. அண்மை மாதங்களாக முன்னணி அரசு படைகளோடும் போலீசாரோடும் நேரடியாக முட்டுப்படும் போராட்டக் களங்களைத் திறந்து வருகின்றது.இதனால் ஆத்திரமடைந்திருக்கும் அரசபடைகளும் காவல்துறையும், முன்னணிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் நோக்கத்தோடு மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கலாம். அக்கட்சியை அச்சுறுத்தி அதன் செயற்பாட்டாளர்களை தற்காலிகமாகவேனும் உள்ளே தள்ளுவதன்மூலம் அக்கட்சியை தொடர்ந்து போராடவிடாமல் தடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம்.இது ஏற்கனவே சிறீதரனுக்கும் நடந்தது, அவருடைய இரண்டு உதவியாளர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டதின் கீழ் பிடிபட்டு பல மாதங்கள் சிறையில் இருந்தவர்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக ஆயுத மோதல்கள் இல்லை.எனினும் தமிழரசியல் அதிகம் ராணுவமயப்பட்டே காணப்படுகிறது. தமிழ் மக்கள் எந்த ஒரு போராட்டத்தை முன்னெடுத்தாலும் அரசபடைகளுக்கும் புலனாய்வுத்துறைக்கும், திணைக்களங்களுக்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக போராட வேண்டியிருக்கும். அவ்வாறு அரச படைகளோடு மோதி அல்லது முரண்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுப்படுவதற்கு சாதாரண ஜனங்கள் அச்சப்படும் ஒரு சூழல்தான் இப்பொழுதும் உண்டு.

அண்மையில் தையிட்டியில் விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கஜேந்திரன் தனி ஒருவராக புதர்களின் மத்தியில் தரையில் உறங்கும் காட்சி அவருடைய ஆதரவாளர்களால் அதிகம் பகிரப்பட்டது. அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். இருபதாயிரத்துக்கும் குறையாத வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர். அவர் ஏன் அங்கே தனியாக நிலத்தில் உறங்க வேண்டும்? அவருக்கு வாக்களித்த மக்களும் அந்த கட்சியின் ஆதரவாளர்களும் எங்கே? அது உயர் பாதுகாப்பு வலையத்தை அண்மித்த பகுதி.அங்கே சென்று போராடினால் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை உண்டு. அவ்வாறு போராடிய கட்சிக்காரர்களை பலாலி போலீஸ் கைது செய்து பின் விடுவித்தது. சட்டத்தரணிகளையும் விட்டுவைக்கவில்லை. போராடப் போனால் கைது செய்யப்படலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதே போலீசின் நோக்கம்.

மருதங்கேணிச் சம்பவத்திலும் ஒரு புலனாய்வாளர் தன்னைத் தடுக்கமுயன்ற கஜேந்திரக் குமாரைத் தட்டிவிட்டுத் தப்பியோடுகிறார். அவரை இரண்டு கட்சிக்காரர்கள்தான் துரத்திக்கொண்டு போகிறார்கள்.ஏனைய பொது மக்கள் குறிப்பாக, சந்திப்பில் கலந்துகொண்ட விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் அவரைத் துரத்திக்கொண்டு போகத் துணியவில்லை.

அது ஒரு தமிழ் யதார்த்தம்.அரச படைகள் மற்றும் போலீஸ்,புலனாய்வுத்துறை போன்றவற்றோடு நேரடியாக மோத சாதாரண தமிழ் மக்கள் பயப்படுகிறார்கள்.ஏன் அதிகம் போவான், நினைவு நாட்களின்போது எல்லா ஆலய மணிகளையும் அடிக்குமாறு கேட்கப்படுகிறது. ஆனால் எல்லா கோவில்களிலும் மணி அடிக்கப்படுவதில்லை. எல்லா வீடுகளிலும் வெளிப்படையாக ஒரு சுட்டிகூட ஏற்றப்படுவதில்லை. கட்சி அலுவலகங்களில் மட்டுந்தான் வெளிப்படையாக நினைவுச்சுடர் ஏற்றப்படும்.சாதாரண ஜனங்கள் அவ்வாறு ஒரு சுட்டியை ஏற்றுவதற்குக்கூட பயப்படும் ஒரு நிலை.

அந்த அச்சத்தைப் போக்குவதென்றால் மக்களைத் திரளாக்க வேண்டும். உதிரியாக இருக்கும் வரைதான் அச்சமிருக்கும். ஆனால் பெரிய திரளாகக் கூடினால் எத்தனை பேரைத் தூக்குவது? போராட்டம் என்றாலே சட்டமறுப்புத்தான். சிறைகளை நிரப்புவதுதான். பொதுமக்கள் அதிகமாகக் குவியும் போது எல்லாரையும் தூக்கி உள்ளே போட முடியாது.உதிரியாகப் போராடும்போதுதான் தனித்தனியாகத் தூக்கி உள்ளே போடலாம். திரளாகக் குவிந்தால் முழுச் சமூகத்தையும் உள்ளே தூக்கிப் போட முடியாது. உதிரிகளாக இருக்கும்வரை மக்கள் பயப்படுவார்கள். திரண்டால் அதுதான் பலம். திரட்சி தான் பயத்தைப் போக்கும்.தைரியத்தை உருவாக்கும். எனவே மக்கள் எந்தளவுக்கு எந்தளவு தங்களுடைய சௌகரிய வலையத்தை விட்டு வெளியே வருகிறார்களோ, அந்தளவுக்கு அந்தளவு போராட்டம் மக்கள் மயப்படும். ஆனால் தமிழ்க் கட்சிகளிடம் அதற்குரிய பொருத்தமான வேலைத்திட்டங்கள் இல்லை. அவ்வாறான ஒரு பின்னணியில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாக அரசு தரப்புடன் முட்டுப்பட வேண்டி வருகிறது.

மக்கள்முன்னணி அந்தப் பயத்தை உடைத்துக்கொண்டு போராட முயற்சிக்கின்றது. அதில் தனிமனித சாகசம் இருக்கலாம். எனினும், அக்கட்சிக்கு ஒரு தட்டுத் தட்டி அடக்க வேண்டும் என்று அரசாங்கம் சிந்தித்ததன் விளைவே மேற்படி கைது நடவடிக்கை. எல்லாவிதமான விமர்சனங்களுக்கும் அப்பால் தமிழ் அரசியலை அண்மை மாதங்களாக நொதிக்கச் செய்வது முன்னணிதான்.

அதேசமயம்,மருதங்கேணிச் சம்பவத்தின் பின்னணியில் அக்கட்சியின் அரசியல் எதிரிகளும் கட்சியின் தூய்மைவாத நடவடிக்கைகளால் எரிச்சல் அடைந்தவர்களும் பின்வரும் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள் அது ஒரு நாடகம், முன்னணி வேண்டுமென்று முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது, அதன்மூலம் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்த முயற்சிக்கின்றது என்பது ஒரு பகுதியினரின் விமர்சனம். இன்னொரு பகுதியினர் முன்னணியைப் பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக விளக்கம் அளிக்கிறார்கள். இந்தியாவை எதிர்க்கும் ஒரு கட்சியை பலப்படுத்தினால் தமிழ்மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தலாம். அதனால் அரசாங்கத்தின் வேலை இலகுவாக்கப்பட்டு விடும்.இரண்டாவதாக, தனது தூய்மைவாத நடவடிக்கைகளால் ஏனைய கட்சிகளோடு இணைய மறக்கும் முன்னணியானது தமிழ் ஐக்கியத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் தடையாகக் காணப்படுகின்றது. எனவே அக்கட்சியை பலப்படுத்தினால் அது தமிழ்த் திரட்சியைப் பல வீனப்படுத்தும் என்று அரசாங்கம் சிந்திப்பதாக ஒரு விளக்கம்.

இவைதவிர,இக்காலப் பகுதியில் ஒரு பேப்பர் கட்டிங் முன்னணியின் அரசியல் எதிரிகளால் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது.அது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட காலகட்டம் ஒன்றில் அது தொடர்பாக டெலோ இயக்கமும் குமார் பொன்னம்பலமும் தெரிவித்த கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்திக் குறிப்பு. குமார் பொன்னம்பலம் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டமையை ஆதரித்து கருத்து தெரிவித்திருக்கிறார்.முன்னணியை விமர்சிக்கும் தரப்புகள் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்தோடு மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பகிர்ந்து வருகிறார்கள்.

கடந்த 14 ஆண்டு கால தமிழ் அரசியலில் விகாரமாக மேலெழுந்து வரும் ஒரு போக்கு இது. தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்குவது. முன்பு மொட்டைக்கடிதம் இருந்தது. இப பொழுது புனை பெயரில் முகநூல் கணக்கு உள்ளது. தமக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்துக்கூறும் சுதந்திரத்தையும் துணிச்சலையும் சமூகவலைத்தளங்கள் அதிகப்படுத்தியுள்ளன. அதனால் யானை பார்த்த குருடர்கள் எல்லாம் விமர்சகர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து சமூக வலைத்தளங்களில் தமது அரசியல் எதிரிகளின் மீது அவதூறை அள்ளி வீசுகிறார்கள். குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட பேப்பர் கட்டிங்கை பரவலாக்குவதும் அதே சீரழிந்த விமர்சனப் பண்பாட்டின் ஒரு வெளிப்பாடு தான்.

ஆனால் அந்த விமர்சனப் பண்பாட்டை வளர்த்தெடுத்ததில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் பெரிய பங்கு உண்டு.தமது அரசியல் எதிரிகளை இனத்துரோகிகளாக உருவகிப்பதன்மூலம் அவர்களின் ஆளுமையை சிதைக்கும் ஒரு அரசியல் விமர்சனப் பண்பாட்டை அக்கட்சிதான் அதிகமதிகம் முன்னெடுத்து வருகின்றது.யாராவது தமக்கு எதிராக எழுதினால்“சோறு முக்கியம்” “அவர்களுக்குப் பசிக்குந்தானே” என்றெல்லாம் எழுதுவதுஅந்த கட்சிக்காரர்கள்தான். அரசியல் விமர்சகர்களை சில ஆயிரம் ரூபாய்க்கு கட்டுரை எழுதுபவர்கள்யுடியூப்பில் உழைப்பவர்கள் என்று எழுதுவதும் அந்தக் கட்சிக்காரர்கள்தான். தமிழ் அரசியலில் விமர்சனத்தை அவதூறாக மாற்றியதில் அக்கட்சிக்குப் பெரிய பங்குண்டு. இப்பொழுது அதேவிதமான அவதூறு அவர்கள் மீதும் அள்ளிவீசப்படுகிறது.

குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அந்த பேப்பர் கட்டிங்கில் இருப்பது உண்மையா பொய்யா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சிலவேளை, அச்செய்தி உண்மையாக இருந்தாலும், அதை மட்டும் வைத்து குமார் பொன்னம்பலத்தை மதிப்பிட முடியாது. அவருடைய வாழ்க்கையை முழுமையாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும்.அந்த பேப்பர் கட்டிங்கில் காணப்படும் செய்தி உண்மையாக இருந்தால் அது அவருடைய ஒரு காலகட்ட அரசியல் நிலைப்பாடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் பிறகு ஒரு காலம் அவருடைய வேறொரு அரசியல் நிலைப்பாட்டுக்காகவே அவர் கொல்லப்பட்டார். அந்த நேரத்தில் அவர் தனது கொழும்பு மைய வாழ்க்கையை, தன்னுடைய சொத்துக்களை பாதுகாக்கும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்திருந்திருந்தால் அவர் தன் உயிரை பாதுகாத்து இருந்திருக்கலாம். ஒரு மூத்த வாக்காளர் கூறினார்“ஜி.ஜி. பொன்னம்பலம் பெற்றெடுத்த ஒரு செல்வநாயகந்தான் குமார் பொன்னம்பலம்” என்று.

தமிழ் அரசியலில் சட்டச் செயற்பாட்டாளர்கள் என்று பார்த்தால்,குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஒரு சதம் கூட வாங்காமல் வழக்காடியவர் என்று பார்த்தால், குமார் பொன்னம்பலத்தின் வாழ்வு பெரியது.மனிதர்களை அவர்களுடைய தொகுக்கப்பட்ட வாழ்க்கைக்குள்ளால்தான் நிறுக்கலாம். ஒரு மனிதருடைய ஒரு காலகட்ட நிலைப்பாட்டை மட்டும் வைத்து நிறுக்க முடியாது. எதிலும் ஒரு தொகுக்கப்பட்ட முழுமையான பார்வை அவசியம்.தமிழ் அரசியலில் ஒருவர் தனது துறைசார்ந்து அதிகமாகத் தொண்டு செய்தாரா அல்லது தொழில் செய்தாரா என்று பார்க்க வேண்டும்.இது குமார் பொன்னம்பலத்துக்கும் பொருந்தும். முன்னணியால் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் விமர்சிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

எனினும், சரிக்கும் பிழைக்கும் அப்பால் முன்னணி தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. இது அக்கட்சியின் ஆதரவுத் தளத்தை பலப்படுத்தும். முன்னணி பயப்படாமல் போராடுகிறது. அந்த முன்னுதாரணத்தை பின்பற்றி மக்கள் திரளக்கூடாது என்று சிந்தித்தே அரசாங்கம் முன்னணியின் முக்கியஸ்த்தர்கள் மீது கைவைத்தது. அதன்மூலம் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் அரச படைகளோடும் புலனாய்வுத் துறையோடும் காவல்துறையோடும் முட்டுப்படுவதில் உள்ள வரையறைகளை,ஆபத்தை உணர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

மேற்படி கைது நடவடிக்கைகளின்மூலம் ரணில், சிங்களபௌத்த உணர்வுகளைத் திருப்திபடுத்தலாம்.அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி அவர் உழைக்கின்றார்.தாமரை மொட்டின் ஆதரவோடு அவர் களமிறங்கினால், தமிழ் வாக்குகள் அவருக்கு கிடைக்காது என்று அவர் அஞ்சக்கூடும். எனவே முழுக்கமுழுக்க சிங்களமக்களின் வாக்குகளில் தங்கியிருப்பது என்று முடிவெடுத்தால், தமிழ் அரசியல்வாதிகளில் கை வைக்க வேண்டும். மேலும் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொழுது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கொதிப்பைத் திசை திருப்பவும் மேற்படி கைது நடவடிக்கைகள் அவருக்கு உதவும்.



நிலாந்தன்

# கல்லோயாவில் தொடங்கி முள்ளிவாய்க்காலில் சிங்களம் பெற்ற "தம்மதீப" வெற்றி!!

தி.திபாகரன்



இலங்கை தீவில் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கான தடையாக ஈழத்தமிழர்களுடைய ஆயுதப்போராட்டம் மூன்று பத்தாண்டுகளாய் எழுந்து நின்றது. அந்தக் கால கட்டத்தில் சிங்கள பௌத்த மயமாக்கல் ஒரு அடி கூட நகர முடியாதவாறு தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது என்பது உண்மையே. ஆனால் முள்ளிவாய்க்காலில் சிங்கள இராணுவம் அடைந்த இனப்படுகொலை வெற்றி என்பது சிங்கள பௌத்த மயமாக்கலுக்கான தடையை உடைத்து விட்டது.

இந்த உடைப்பின் மூலம் மிக வேகமாக தமிழர் தாயகம் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு கடந்த 14 வருடங்களாக உட்பட்டுக்கொண்டிருக்கிறது.

## தமிழர் மீது மேற்கொண்ட ஒடுக்குமுறை

இங்கே தமிழீழ விடுதலை புலிகள் தமிழர் தாயகத்தில் சிங்களதேசம் ஈழத்தமிழர் மீது மேற்கொண்ட அனைத்து விதமான ஒடுக்குமுறைகளுக்கும் தடையாக இருந்தார்கள் என்பதை அரசியல், இராணுவ, தத்துவார்த்த அர்த்தத்தில் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்தத் தடை முள்ளிவாய்க்காலில் உடைக்கப்பட்டது. இதன் மூலம் இராணுவம், பொலிஸ், நிர்வாக அலகுகள், அதிகாரிகள், சமூக குழுக்கள், பௌத்த அமைப்புகள், பிக்குகள், ஊடகங்கள் என அனைத்தும் தமிழர் தாயகத்துக்குள் படையெடுத்து சிலந்தி வலைப்பின்னல் போன்று தமிழர் தாயகத்தை தற்போது கிடுக்குப்பிடிக்குள் கொண்டு வந்திருக்கின்றன.

இந்த முற்றுகையிலிருந்து தமிழர் தாயகத்தை பாதுகாப்பது என்பது இலகுவான காரியம் அல்ல. அதற்கு தமிழ் மக்கள் ஒன்றுதிரண்ட சக்தியாக நீண்ட ஜனநாயக முறைமை தழுவிய வெகுஜனப் போராட்டங்களுக்கு தயாராக வேண்டும். இந்தக் கிடுக்குபிடியை சிங்கள தேசம் நாடாளுமன்ற சட்டங்களினாலும், நிர்வாக ஏற்பாடுகளினாலும், நீதிமன்ற தீர்ப்புகளின் ஊடாகவும், இராணுவ பொலிஸ் புலனாய்வுத்துறை அச்சுறுத்தல்களுக்கூடாகவும் தமிழ் மக்களை உளவியல் ரீதியாக உடைத்து முடமாக்கியுள்ளது.

சிங்கள மேலாண்மை வாதத்தை தமிழ் மக்களின் மனதில் உளவியல் ரீதியாக வழமைப்படுத்தல் என்ற உளவியல் யுத்தம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் ஒரு வலுவான வெகுஜன போராட்டங்களை நடத்த முடியாமல் உளசோர்வுக்கும், உளச்சலிப்பிற்கும் உட்படுத்தி தமிழர் போராட்டங்களை எழவிடாமல் தடுக்கிறது.

## பௌத்த சிங்கள தேசியவாதம்

1880 ஆம் ஆண்டுகளிலேயே பௌத்த சிங்கள தேசியவாதம் எழுச்சி பெறத் தொடங்கிவிட்டது. அதனை பெரு விருச்சமாக அநாகரிக தர்மபால வளர்த்தெடுத்தார். பௌத்த சிங்கள தேசியவாதத்தின் இலட்சியம் இலங்கை தீவை சிங்கள பௌத்த நாடாக மாற்றுவது. அதற்கு இந்திய எதிர்ப்பு வாதத்தை முதன்மைப்படுத்துவது. இலங்கை மீதான இந்தியாவின் பிடியை அகற்றுவது. தமிழ் பேசும் மக்கள் இலங்கை தீவில் இருக் கும் வரை இந்தியாவின் ஆதிக்கம் இலங்கையில் இருக்கும்.

எனவே தமிழர்களை இலங்கை தீவில் இருந்து முற்றாக அகற்றுவது என்பது தான் அவர்களுடைய முதல் கட்ட வேலை திட்டமாக அமைந்தது.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே தமிழ் இனவிரோத நிலைப்பாட்டை சிங்கள தலைவர்களும் சிங்கள தேசமும் எடுத்து விட்டன. அந்தக் காலகட்டத்தில் இத்தகைய தமிழின ஒழிப்பு ஆரம்பமாகிவிட்டது என்பதை தமிழ் தலைவர்கள் கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டார்கள், பார்க்கவுமில்லை. அந்த அளவிற்கு அன்றைய தமிழ் தலைவர்களிடம் நீண்ட தூர அரசியல் பார்வையும் இருக்கவில்லை என்பதுதான் மிகப் பரிதாபமா னதும் துரதிஷ்டவசமானதாகும்.

## இலங்கை தீவின் ஒட்டு மொத்த சனத்தொகை

இலங்கைத் தீவில் ஒட்டு மொத்த சனத்தொகையில் 12 வீதம் குறைந்த அளவினராக தமிழர்கள் இருக்கின்றபோது மொத்த நிலப்பரப்பில் 30 விகித நிலப்பரப்பில் தமிழர்கள் வாழ்கின்றனர்.

அதாவது வட கிழக்கு மாகாணம் 30 விகித நிலப்பரப்பளவைக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் இலங்கைத் தீவின் 1516.4 கிலோமீட்டர் நீளமான கடத்தரப்பில் 14 கரையோர மாவட்டங்களில் 7 மாவட்டங்கள் தமிழர் தாயகத்துக்குள் அடங்குகின்றன.

ஆனால் இந்த தமிழர் தாயகத்தின் கடற்பரப்பு 899.3 கிலோமீட்டர்கள் ஆக உள்ளது. புத்தளம் மாவட்டத்தின் 241.3 கி.மீ கடற்கரையோரப் பகுதியின் பெரும்பகுதியில் தமிழ் பேசும் மக்களே வாழ்கின்றனர். இத்தகைய புவியியல் சாதக தன்மையும் கேந்திரத் தன்மையும் இயற்கை வளமும் தமிழர் தாயகம் போதுமான அளவு கொண்டிருப்பதனால் சிங்கள தேசத்திற்கு தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்வது அவசியம் ஆனதும் அத்தியாவசியமானதாகவும் காணப்படுகிறது.

## டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம்

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே சிங்கள தேசத்தில் பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பௌத்த சிங்கள மயமாக்கலை விரிவுபடுத்த தொடங்கியது.

அந்த விரிவுபடுத்தலில் நிலங்களை ஆக்கிரமித்தல் கையகப்படுத்தல் என்ற கொள்கையை வகுத்தனர். இதன் அடிப்படையிற்தான் முதற்கட்டமாக தமிழர்கள் கையில் இருக்கின்ற நிலப்பரப்பையும் பெரும் கடல் பரப்பையும் சிங்கள தேசம் கைப்பற்ற முனைகிறது.

அதன் முதற் படியாக நிலத்தை பறிப்பது, நிலத்தை பறிப்பதன் மூலம் கடலைத் தமது கட்டுப்பாட்டுள் கொண்டு வருவது. இதன் மூலம் இலங்கை தீவை முற்று முழுதாக சிங்கள பௌத்த மயப்படுத்துவது என்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. 1931ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மந்திரி சபை ஆட்சி முறைமை உருவாக்கப்பட்டது.

இந்த மந்திரி சபை ஆட்சி முறையில் 1936ல் தனிச் சிங்கள மந்திரிகளை மாத்திரமே தெரிவு செய்து தமிழ் அரசியல் தலைவர்களை புறந்தள்ளி அரசியல் அதிகாரம் அற்றவர்களாக்கி உருவாக்கப்பட்ட தனிச்சிங்கள மந்திரி சபை 1947 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

## அரசியல் உரிமை

தமிழ் மக்களை இலங்கைத் தீவின் அரசியல் அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கான முதற்படி 1936ல் தனிச் சிங்கள மந்திரிசபை உருவாக்கிதன் மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமை இல்லை.

அதிகாரம் இல்லை. நிர்வாகத்தில் பங்கு இல்லை. இத்தீவை சிங்களத் தலைவர்களே ஆளுவார்கள் என்பதை முதன்முறையாக பறைசாற்றிய இடம் 1936 ஆம் ஆண்டு சிங்களத் தலைவர்களால் அமைக்கப்பட்ட தனிச்சங்கள மந்திரி சபைதான் என்பதனை மறந்து விடக்கூடாது.

இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளை எவ்வாறு தமிழின அழிப்பிற்கு சாதகமாக வடிவமைத்து பயன்படுத்தலாம் என்ற தந்திரமும் நுணுக்கமும் சிங்களத் தலைவர்களுக்கு நன்கு தெரியும். தமிழ் தலைவர்களையும் தமிழ் புத்திஜீவிகளையும் பயன்படுத்தியே அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதும் அவர்களுக்கு கைவந்தகலை.

அதனை பொருத்தமான எல்லா சந்தர்ப்பத்திலும் அவர்கள் பயன்படுத்த தவறவும் இல்லை. வாய்ப்புகளை கையாள்கின்ற கலை தான் அரசியல். அந்த அரசியல் கலை வித்தையில் சிங்களத் தலைவர்கள் விற்பன்னர்கள்தான் என்பதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

1930களின் நடுப்பகுதியில் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் திட்டவட்டமான முடிவுகளுடனும் நீண்ட தூர பார்வையுடனும் திட்டவரைவுகளை ஆய்வு செய்து தமிழர் தாயகத்தில் அபகரிப்பதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தார்.

## பௌத்த சிங்கள மயமாக்கல்

இந்தத் தயார்படுத்தலை சுதந்திரம் அடைந்த கையோடு 1949 ஆம் ஆண்டு வறண்ட வலய அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்த முதலாவது சிங்கள குடியேற்றத் திட்டம் பட்டிப்பழை ஆற்றுப்பள்ள தாக்கில் தொடங்கியது.

அதுவே தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் அழிவின் ஆரம்பம் எனலாம். இந்த சிங்களக் கொடியேற்றத்தில்தான் இங்கினியாகல என்ற இடத்தில் உள்ள சிங்கள குடியேற்றவாசிகளால் 11 ஜூன் 1956 ஆம் ஆண்டு முதலாவது தமிழினப் படுகொலை மேற்கொள்ளப்பட்டது. 67ஆவது ஆண்டு கல்லோயா படுகொலை நினைவை தமிழர் தேசம் இந்த வாரம் அனுஷ்டிக்கிறது.

பௌத்த சிங்களமயப்படுத்தல் என்ற இலட்சியத்தை அடைவதற்காக சிங்கள தேசம் தமிழர் தாயகத்தின் மீது பல்வேறு வகையான ஒடுக்கு முறைகளை படிப்படியாக மேற்கொண்டது. அதன் முதல் படி தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவது, சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதும், இதன் மூலம் தமிழ் மக்களை ஒரு பிரதேசத்தில் இருந்து வெளியேற்றுவது அல்லது சிங்கள மக்களுடன் கரைத்துவிடுவது. ஒரு பிரதேசத்தின் தமிழ் மக்களின் செறிவை குறைப்பது.

தமிழர் செறிந்து வாழும் பிரதேசத்தை நிர்வாக ஏற்பாடுகளின் மூலம் பிரித்து சிங்கள மாவட்டங்களுடனும் அல்லது மாகாணங்களோட இணைப்பதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் தமிழ் மக்களை சிறுபான்மையர் ஆக்குவது, அதன் மூலம் தமிழ் மக்கள் ஒரு அரசியல் சக்தியாக இல்லாமல் செய்வதும், அந்தப் பிரதேசத்தில் இருந்து சிறுபான்மையினர் ஆக்கப்பட்டதன் விளைவாக ஒரு படிமுறையாக தமிழ் மக்களை வெளியேற வைப்பது.

அத்தோடு நிர்வாக ஏற்பாடுகள் மூலம் தமிழர் பகுதியில் சிங்கள அதிகாரிகளை நியமிப்பது, சிங்கள இராணுவ கூட்டுப்படை தலங்களை உருவாக்குவது. சிங்கள பொலிஸ் அதிகாரிகளை நியமிப்பது, அரச திணைக்களங்கள் காரியாலயங்கள் என்பவற்றில் சிங்கள அதிகாரிகளையும் சிங்கள ஊழியர்களையும் அமர்த்தி சிங்கள மொழியிலேயே நிர்வாக ஒழுங்குகளை செய்வது, இதன் மூலம் சிங்கள மொழியை தமிழ் மக்கள் மீது திணிப்பது தமிழ் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ சிங்கள மொழியை நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் கற்கவும் பேசவும் நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

இதற்கு நல்ல உதாரணம் நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரையான பகுதியிலும் சிலாபம் பகுதியிலும் உள்ள தமிழர்கள் வீட்டு மொழியாக சிங்களத்தை பேசும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள்.

மேல் மாகாணத்தில் 200க்கும் மேற்பட்ட தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன என்ற அதிர்ச்சிகரமான தகவல்கள் உண்டு. இவ்வாறு தமிழர் தாயகத்தின் மீது நில ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்டதன் விளைவுகளினால் தமிழர் தேசத்தில் 1970களின் பின்னர் இளைஞர்கள் ஆயுதம் எடுத்துப் போராட தொடங்கினர்.

## முள்ளிவாய்க்கால் பேரழிவு

1983 ஆம் ஆண்டின் பிற்பாடு ஆயுதப் போராட்டம் வீறு கொண்டு எழுந்ததன் விளைவு தமிழர் தாயகத்தில் சிங்களக் கொடியேற்றங்கள் தற்காலிகமாக தடுத்து நிறுத்தப்பட்டன.

அல்லை, கந்தலாய் குடியேற்ற திட்டங்கள, மணல் ஆற்றில் உருவாக்கப்பட்ட டொலர், கென்ட் பண்ணைகள் போன்ற குடியேற்ற திட்டங்களும் தடைப்பட்டன.

அத்தோடு குடியேற்றப்பட்ட சிங்களக் கொடியேற்றவாசிகள் தென்பாகுதி நோக்கி தப்பிய மோடியும் விட்டனர். 1983 லிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் சிங்கள தேசத்தின் தமிழர் தாயக அபகரிப்பு என்பது தற்காலிகமாக தடைப்பட்டிருந்தது.

ஆனால் முள்ளிவாய்க்கால் பேரழிவு சிங்கள தேசத்திற்கு இருந்த பெரும் தடையை உடைத்து சிங்களமயமாக்கலுக்கான பாதையை திறந்து விட்டிருக்கிறது.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழர் தாயகத்தில் என்றும் இல்லாத அளவிற்கு பௌத்தமயமாக்களும், சிங்களமயமாக்கல்களும் இணைந்த நில அபகரிப்பு இன்று யாழ்ப்பாணத்தின் வட கரை வரை பரந்துவிட்டிருக்கிறது.

தமிழ் கட்சிகளிடையே முரண்பாடுகளை தோற்றுவிப்பது, அரசியல் தலைவர்களை விலைக்கு வாங்குவது, தமிழ் தலைவர்களை சிங்கள தேசியக் கட்சிக்குள் இணைப்பது, தமிழ் அதிகாரிகளை நியமிப்பது, தமிழ அரசியல் கட்சிகளைக் கொண்டு சிங்களமயமாக்கல்களுக்கான அடிக்கட்டுமானங்களை இடுவது, தமிழர் தாயத்தில் ஆயிரம் விகாரைகளை கட்டுவது.

இறால் பண்ணைகளை அமைப்பது, மீன்பிடித் துறைமுகங்களை கட்டுவது, கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குவது போன்ற பல்வேறு வகையான கொள்கைகளை கையாண்டு இலங்கை தீவை சிங்கள பௌத்த சிங்களமயப்படுத்தலுக்கான இலக்கினை நோக்கி சிங்கள தேசம் மிக வேகமாக நகர்ந்து செல்கிறது.

## இந்தோ பசிபிக் பிராந்திய ஆதிக்கம்

இந்தச் சூழலில் தமிழ் மக்களும், தமிழ் தலைமைகளும் தமக்கிடையே குடும்பி சண்டை போடுவதும் தாமும் பிரிந்தது நின்று கொண்டு மக்களையும் பல்வேறு துண்டுகளாக பிரித்து சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது , தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்கின்ற சிங்கள அரசுக்கு துணை போவதாகவே அமையும்.

இந் நிலையில் கல்லோயா இனப்படுகொலையை நினைவில் நிறுத்தி எதிர்காலத்தில் தமிழர் தாயகம் எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துக்களை கருத்தில் கொண்டு இன்றைய இந்தோ பசிபிக் பிராந்திய ஆதிக்க போட்டியில் ஈழத் தமிழர் தமக்கான பங்கையும் பாத்திரத்தையும் வாய்ப்பையும் வகையாக பயன்படுத்தி தமிழர் தாயகத்தை தக்க வைப்பது சாத்தியமானது.

எனவே இதற்கு தமிழ் மக்களை ஐக்கியப்படுத்தி ஒன்று திரட்டப்பட்ட செயற்பாட்டு சக்தியாக வடிவமைப்பதிலுமே தங்கியுள்ளது.

## மானிப்பாய் சாவல்கட்டு அந்திக்குழி ஞானவைரவர் ஆலயத்தில் நூறு அடி உயரமான இராஜகோபுரற்கான அடிக்கல் நாட்டு விழா






மானிப்பாய் சாவல்கட்டு அந்திக்குழி ஞான வைரவர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள நூறு அடி உயரமான இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா வியாழக்கிழமை (15) காலை இடம் பெற்றது.
ஆலய பிரதம குரு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இராஜகோபுரத்துக்கான அடிக்கல்லை சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.
இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சாவல்கட்டு வட்டார அமைப்பாளர் ந.கவிச்சந்திரன், மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோரும் கலந்துகொண்டு இராஜ கோபுரத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

## பொத்துவில் ரொட்டை வீரையடிபிள்ளையார்
### ஆலய அனாவர்த்தன ஏக குண்ட மஹா கும்பாபிஷேகம் 2023

பொத்துவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஊரணி ரொட்டை கிராமத்தில் பல ஆண்டுகளாக ஆற்றங்கரை ஓரம் வீரை பாலை வேம்பு சூழ் நிழலில் அமர்ந்திருந்து நாடி வரும் அடியவர்களின் குறைகளை தீர்த்து ஊர்கார்த்து பல அற்புதங்களை நிகழ்த்தி வரும் ரொட்டை வீரையடிபிள்ளையார் ஆலய அனாவர்த்தன ஏக குண்ட மஹா கும்பாபிஷேகம் 2023.
ஆரம்பம் 2023/07/07 எண்ணெய்காப்பு 2023/07/08 குடமுழக்கு 2023/07/09 இடம்பெற உள்ளது... அதற்கான ஏற்பாடுகள், வேலைபாடுகளும் இடம் பெற்றுவருகின்றது...
இருப்பினும் நிதி பற்றாக்குறையும் நிலவி வருகின்றுது எனவே அன்பு உள்ள கொண்ட பக்த அடியார்களே இவ்வாலயத்திற்கு உங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்கள்.





**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள், உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME




# ஷீரடி கருணாலயம் தாமரைக்குளம்..




இந்துமா சமுத்திரத்தின் முத்தாகவும் முதன்மையாகவும் திருமூலரால் சிவபூமி என போற்றப்பட்டு வரும் இலங்காபுரியில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் இயற்கை வளம் நிறைந்த வயல் மலை காடு குளங்கள் சூழ் கிராமமாம் திருக்கோவில் தாமரைக்குளம் கிராமம் அமைந்திருந்து அன்னதான பிரபுவாக காட்சியளித்து நாடி வரும் அடியவர்களுக்கு பல அற்புதங்களை நிகழ்த்தி அடியவர்களின் குலங்காத்து கலியுகத்தை கார்க்க வந்த கருணை மூர்த்தியாக உயிரோடும் உணர்வோடும் காட்சியளிக்கும் தாரைக்குளம் ஸ்ரீ ஷிரடி சாயி நாதரின் கருணாலயம்....
இவ் ஆலயம் ஆனது இலங்காபுரியின் ஓர் பெரிய ஷிரடி கருணாலயமாகும் பெரிய பரப்பளவை கொண்ட ஆலயமாகவும் இலங்காபுரியில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறைமாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திற்கு குட்பட்ட தாமரைக்குளம் பகுதியில் காணப்பட்டுகின்றது...
இவ் தமாரைக்குளம் ஷிரடி யானது இன்று இலங்கை மக்களால் மட்டும் இன்றி வெளிநாட்டவர்களால் கூட இலங்கை ஷிரடி என பெயர்பெற்று வர்ணிக்கப்பட்டு வருகின்றது...
இதன் சிறப்பு இலங்கையில் உள்ள ஷிரடி தலங்களை விட இவ் ஷிரடி கருணாலயம் ஆலயத்திலும் பரப்பளவிலும் மிக பெரிய தாக காணப்பட்டு வருவதுடன் இலங்கையில் உள்ள மக்கள் நடமாட்டம் குறைந்த ஒரு சிறிய கிராமத்தில் அமையப்பெற்றதும், வயல்வெளி சூழ்ந்து இருப்பதும் சிறப்புஅம்சமாகும்
இந்த ஷிரடி நாதர் ஆலயத்தின் தலைவிருட்சமாக ஆலயத்தின் முன்றலில் உள்ள வேம்பு மரமானது குருஸ்தானத்தில் மிக கம்பிரமாக காட்சியளித்து வருகின்றதுடன் இதன் தலைவிருட்சமான வேம்பு மரம் இயற்கையாகவே அமைந்திருப்பது இவ்வாலயத்தின் சிறந்த அற்புதமாகும். மற்றும்மகாராஷ்டிராவில் உள்ள ஷிரடியில் அமைந்தது போலவே இங்கு குருஸ்தானம் இயற்கையாகவே அமையப்பெற்றது இதன் இன்னுமொரு அற்புதமாகும்..
இவ்வாலய அடிக்கல் 2018ஆம் ஆண்டு ஆவனி திங்கள் 16ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டு இலங்கை பெரியகல்லாற்றை சேர்ந்த வரும் நோர்வை நாட்டை வசிப்பிடமாக கொண்ட திருமதி.சீதாவிவேக் அவர்களினாலும் அவர்களின் வாரிசுக்களான மிருதா ப்ரம்மி சஜீதா சஜிவ் ஆகியோரின் நிதிப்பங்களிப்பின் முலம் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
இதன் கும்பாபிஷேகமானது 2021 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 02ஆம் திகதி வெள்ளிகிழமை காலை 09.00 மணிமுதல் 10.00மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் ஷீரடி சாயிநாதரின் மகா கும்பாபிஷேக குட முழுக்கு பெருவிழா இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.
இலங்கை தாரைக்குளம் ஷிரடி கருணாலய சாயி நாதரின் திருவுருவ சிலையானது இந்தியாவில் உள்ள ஜெய்ப்பூரில் இருந்து கொண்டுவரப்பட்டதுடன் இந்தியா ஷிரடியில் எவ்வாறு சாயி நாதர் அமர்ந்திருக்காரே அதே போன்று இவ் இங்கு அமர்ந்திருக்கின்றார்...
மேலும் இவ் ஷரடி கருணாலயத்தில் காசிவிஸ்வநாதர் கம்பிரமாவும் பளிங்கு கற்களினால் ஆன விநாயகரும் த்த்தாதேயரும் கருணையுடனும் அலங்காரத்திரடனும் காட்சியளிக்கின்றனர்...
அதுடன் ஜெய்வீர ஹனுமானும் அவருடைய கம்பீரமான தேற்றத்துடன் எழுந்தருளி இருக்கின்றார்.
இவ் ஆலய தர்மகா்த்தாவின் கூற்றுப்படி இந்த தெய்வங்களின் காட்சி கிடைத்ததினால் தான் இந்த இடத்தில் விநாயகர், ஆஞ்சிநேயர், சிவன் பிரதிஸ்டைசெய்யப்பட்டுள்ளது.
இவ்வாலய பற்றிய மேலதிக தகவலை ஸ்தாபகர் சீதாவிவேக் கேட்ட போது அவர் தெரிவிக்கையில் ஷிரடி கருணாலயமானதுதானாக வே அமையப்பட்டதுமாத்திரம் இன்றி இவ் ஆலயம் அமைப்பது பற்றி சாயிநாதர் என்னிடம் எந்தவொரு விதத்திலும் கூறப்படவில்லை எனவும் இவ் ஆலயம் அமைப்பதற்கான கருவியாக மாத்திரமே சீதாவிவேக் அவர்களை பயன்படுத்தியுள்ளதாகவும்..
இந்த ஆலயமானது கட்டப்பட்டது நடத்தப்படுவதும் இறைவனின் சித்தமே இவ் அமைப்பட்டது ஏற்கனவே திட்டமிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார் மேலும் தெரிவிக்கையில் நான் சாதாரன மனிதன் இவ் பணிக்கு என்னை தேர்தெடுத்துள்ளார். இவ் ஆலயத்தை நடுத்துவதற்கான அருளையும் ஆற்றலையும் வசதியையும் எமக்கு தந்துள்ளார். மேலும் இவ் அமைவிடமானது ஒரு புனிதமான இடமாகவும் இவ் இடத்தை அண்டி வாழ்பவர்கள் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள் என தெரிவித்தார்....
இவ் தாமரைக்குளம் ஷிரடி நாதர் அவரின் அன்பு உள்ளம் கொண்ட பக்த அடியவர்களுக்கு பல அற்புத லீலைகளை புரிந்துள்ளார் பலரின் கஷ்ரங்கள் நோய்பிணிகள் போன்ற வற்றை அகற்றி நல்வாழ்விற்கு வழிகாட்டியாகவும் குழந்தை வரம் கேட்டவருக்கு குழந்தை வரமும் அழித்து அற்புதலீலையும்புரிந்துள்ளார்...
சாயி நாதர் நடமாடும்தெய்வமாக வாழ்ந்து பல லீலைகள் புரிந்து பின்பு உடலை கழற்றி இவ் பூமியில் விட்டுவிட்டு சென்ற சிவனின் அவதார புருசனான சாயிநாதர் வாழும் வீடாக அழகான சூழலில் அமையப்பட்டது மக்களால் இலங்கை ஷிரடி என போற்றப்பட்டு வரும் தாமரைக்குளம் ஷிரடி கருணாலயமாகும்..

**ஜே.கே.யதுர்ஷன்**

## எரிந்து கொண்டிருக்கும் தமிழர் தாயகத்தில்...

பேசப்பட்டு விவாதிக்கப்படும் விவகாரமாக மட்டுமே இருந்து கொண்டிருக்கின்றதே தவிர, அதில் எந்தவிதமான தீர்க்கமான திருப்பம் எதுவும் இதுவரையில் இல்லை.

இந்த விவகாரத்தில் திட்டவட்டமானதும் யதார்த்தபூர்வமானதுமான ஓர் தீர்க்கமான நிலைப்பாட்டை, இப்பொழுதாவது தமிழர் தரப்பு ஒற்றுமையுடனும் உறுதியுடனும் எடுத்து, அதன் தர்க்கரீதியான முடிவினை நோக்கி அதனை நகர்த்திச் செல்வதற்கு, இன்றும் கூட ஆக்கபூர்வமான அரசியல்- ராஜதந்திர யுக்தி என்பது தூரத்து நிலவாகவே நீடித்து நிற்கின்றது.

மறுபுறத்தில், தமிழர் தாயகத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அடாவடி அராஜகம், துணைநிற்கும் வனத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பனவற்றின், அட்டகாசத்துடன் தனியார் காணிகளை கையகப்படுத்தும் கூட்டு நடவடிக்கைகள் அனைத்தும், அதிகார பலம் கொண்ட சில சிங்கள ஆளும் கட்சி அரசியல்வாதிகள், மற்றும் தீவிரவாத பௌத்த பிக்குகள் அடங்கிய சிங்கள பௌத்த "மாபியா" எனப்படும் கூட்டுக் கும்பலினால் தொடர்ந்து வழிநடத்தப்படுகின்றன.

அதேநேரத்தில், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஒரு சிலவற்றின் நெறிப்படுத்தல்களோடும், நிதி உதவியோடும், "றிமோற் கொன்றோலில்" இயங்கிக்கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்புக்களின் தொடர் போராட்டம் என்பது, வாரங்கள், மாதங்கள், வருடங்கள் என காலத்தை வென்று நிற்கும் கண்ணீர்க் காவியமாக , பொலீஸ் கெடுபிடிகள், அடாவடிகள் என்பனவற்றுக்கெல்லாம் ஈடு கொடுத்து, தலைமைத்துவப் பண்பு கொண்ட ஒருசில பெண் போராளிகளையும் தமிழ்த் தேசியக் களத்திற்கு அறிமுகப்படுத்தி, நீதி கிடைக்கும் என்ற, பாதிக்கப்பட்ட தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் நம்பிக்கையோடு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் இன்னமும் தீர்ந்தபாடில்லை. அவ்வப்போது ஒரு சிலர் விடுதலையாவது தொடர்பில், சர்வதேசத்தின் கவனத்தைக் கவர, அரசாங்கத்தினால் விளம்பரம் கொடுக்கப்பட்டு வந்துள்ளதே தவிர, நீண்டகால சிறைத் தண்டனையோடு மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கும், எஞ்சியுள்ள ஏனைய கைதிகள் தொடர்பில் முடிவெடுப்பதில் எந்தவொரு அவசரமும் கண்ணில் படவில்லை.

இந்த அரசியல் கைதிகளில், ஒரு - புற்றுநோயாளி உட்பட நீண்டகால நோயாளிகள் அடங்கியுள்ளனர் என்பதிலும், அரசாங்க அதிகார மட்டத்தில் மனிதாபிமானம் மௌனித்தே நிற்கின்றது.

இதே வேளையில், ஒரு சில பழைய சம்பவங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளருமான சிவாஜிலிங்கத்திற்கு எதிராக, தியாகி திலீபனின் நினைவேந்தலை இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் கோண்டாவிலில், தனியாளாக அவர் அனுஷ்டித்த சம்பவம் தொடர்பில், பயங்கரவாத சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கின்றது.

இது ஒரு புறம் இருக்க, வன்னிப்பிரதேசத்தில் தமிழர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அரச காணித் துண்டுகளை சிங்களவர்களுக்கு அன்பளிப்புச் செய்யும் பகற் கொள்ளை நடவடிக்கைகள் பேரினவாத உயர் அதிகாரிகளால் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

வடக்கில், வன்னியில் உள்ள குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை என்பனவற்றில் நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி நிலை கொண்டுள்ள பௌத்த ஆக்கிரமிப்பு அடாவடித்தனம், தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையை அண்டிய கன்னியாவில், சிவன் கோவில் விவகாரத்தில், தொடர்ந்து மிரட்டிக் கொண்டிருக்கின்றது.

இன்னொருபுறத்தில், வடக்கு- கிழக்கின் இயற்கையான நில இணைப்பை பொறுத்தமட்டில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலோரக் கிராமங்களான நாயாறு மற்றும் கொக்குளாயின், தமிழர்களின் பூர்வீகக் காணிகளை, இரண்டு, மூன்று மடங்கு விலை கொடுத்து, வந்தேறு குடிகளான சிங்கள மீனவர்கள் மிகத் தந்திரமாக கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு முற்றுப்பெறும் நிலையில் உள்ளன.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைப் புறத்தில், மாதவனை, மயிலத்தமடு பிரதேசத்தில், நீண்ட நெடுங்காலமாக தமிழர்களின் கைகளில் இருந்து வந்த மேய்ச்சல் தரைகளில், எத்தனையோ அரசாங்கமட்ட வாக்குறுதிகளுக்குப் பின்னரும் கூட, சிங்கள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் அப்படியே நீடிக்கையில், அச்சுறுத்தல்கள் அபகரிப்புக்களுக்கு மத்தியிலேயே தமிழர்களின் கால்நடைகளின் ஜீவனம் அங்கே அல்லாடிக் கொண்டிருக்கின்றது.

கலைக்கப்பட்டிருக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளிடம் இருந்து, கல்வி மற்றும் சுகாதார துறைகளில், அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்கள் ஊடாக, கொழும் பில் உள்ள மத்திய அரசாங்கத்தினால் இரவோடு இரவாக களவாடப்பட்ட பல்வேறு அதிகாரங்கள் தொடர்ந்தும் கொழும்பிலேயே குவிந்து கிடக்கின்றன.

இந்த சூழ்நிலையில் தான், கடந்த எட்டாம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு- மன்னிக்கவும்- சுமந்திரனின் வார்த்தைகளில் சொல்வதானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு தலைமை தாங்கிய தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர்- திரும்பவும் மன்னிக்கவும்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தனக்கே உரிய பாணியில், தனது ஆதங்கத்தையும், ஆத்திரத்தையும் கொட்டித் தீர்த்திருக்கின்றார்.

அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் தொடர் ஏமாற்றங்களை விலாவாரியாக விபரித்த அவர், எமது பொறுமைக்கும் எல்லை உண்டு என உரத்த தொனியில் இடித்துரைத்திருக்கின்றார்.

தமிழ் மக்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்று சம்பந்தன் கூறுவது இதுதான் முதற் தடவை அல்ல. இதற்கு முன்னரும், கடந்த வருட இறுதியில் ஜனாதிபதியுடனான சந்திப்பு ஒன்றில் இதே வார்த்தைகளையே சம்பந்தன் பயன்படுத்தியிருந்தார் - அதுவும் ஆக்ரோஷத்துடன்.!

மிக முக்கியமான விடயம் எதுவெனில், "இதுவரையில் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் எமது உள்ளக சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வந்துள்ள நாம், அது மறுக்கப்படுமானால், வெளியக சுயநிர்ணய உரிமையை பிரியோகிப்பது பற்றி முடிவெடுக்க வேண்டியிருக்கும்". என்று அவர் பேசி இருப்பதுதான்.

முதற் தடவையாக சம்பந்தன் நாட்டின் அரசுத் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவோடு தமிழர்களின் வெளியக சுயநிர்ணய உரிமை பற்றி ஆக்ரோஷத்துடன் ஆணித்தரமாக பேசியிருக்கின்றார் என்பது மிகமிக முக்கியமானது. சம்பந்தனிடம் ஒரு பழக்கம் உண்டு என்பது மிக நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும்.

**அரசியற் சந்திப்புக்களில், ஏதாவது ஒரு விடயத்தை வலியுறுத்த வேண்டுமென்றால், உரிய கட்டத்தில் அவரின் குரல் உயரும். உயர்ந்த குரல் மேலும் உயரும். மிடுக்கோடு கூடிய தடிப்பான வார்த்தைகள் வெளிவரும். இந்த விடயத்தில் அவர் ஒரு கில்லாடி.**

**ஜனாதிபதியுடனான அந்த சந்திப்பிலும் சம்பந்தன் கனகச்சிதமாக கையாண்டு இருப்பார் என்று உறுதியாக சொல்ல முடியும். அவரை நன்கு அறிந்தவர்களுக்கு இந்த விடயத்தில் எந்தவொரு காணொளிபதிவும் தேவைப்படாது.**

ஆனால், நாம் சொல்ல வந்த விடயம் அதுவல்ல. சம்பந்தன் விடுத்த சிவப்பு எச்சரிக்கைக்குப் பிறகு, பதில் அளித்த ஜனாதிபதி ரணில் மிகவும் "கூலாக பேசி இருக்கின்றார். "எதிர் வரும் யூலை 30ம் திகதிக்குள் நீங்கள் கூறிய விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்காது விட்டால், பிறகு என்னைப் பேசுங்கள்". என்று அவர் தெரிவித்திருக்கின்றார்

அதுதான் ரணில் விக்கிரமசிங்க.! இந்த அரசியல் அனுபவப் பக்குவம் தான், மிகவும் எதிர்மறையான சூழ்நிலைகளிலும் அவருக்கு கைகொடுத்து வந்திருக்கின்றது. இந்த சந்திப்பில் வெளியக சுயநிர்ணய உரிமை பற்றி சம்பந்தன் பேசியிருப்பது உண்மையில் நல்ல விடயம்தான்!

ஆனால், இந்த சந்திப்புக்கு அப்பால், அந்த விடயத்தை முன்னெடுப்பதற்கு சம்பந்தனோ, தமிழரசுக் கட்சியோ ஒருபோதும் தயாரில்லை என்பது உலகறிந்த விடயம்.

இப்பொழுது, இந்த சந்திப்பில் சம்பந்தன் ஆக்ரோஷமாக எழுப்பிய விடயங்களின் அடிப்படையில், ஒரே ஒரு கேள்விதான் தமிழ்த் தேசிய தரப்புக்கள் முன்னால் உள்ளது.

இன்றைய நிலையில், எமது மக்களின் உரிமைகள், மற்றும் எதிர்கால நலன்கள் தொடர்பில் என்ன செய்ய வேண்டும் ?

ரணில் தனது சொந்த பலத்தில் ஜனாதிபதியாக வந்தவர் அல்ல. நெருக்கடியான சூழ்நிலையில், தமது தனிப்பட்ட நலன்களையும், அரசியல் இருப்பையும் பாதுகாப்பதற்காக ராஜபக்சாக்களால் ஜனாதிபதி கதிரைக்கு கொண்டு வரப்பட்டவர்.

அந்த கதிரையில் அமர்ந்திருந்தாலும், அவர் ஒரு நொண்டிக் குதிரைதான். சண்டிக் குதிரையும் கூட.

அந்தக் குதிரையின் அரசியல் அதிகாரம் ராஜபக்சாக்களின் ஆதரவிலும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் அனுக்கிரகத்திலும் தங்கியுள்ளது.

அவரின் அதிகார பிரயோகத்திற்கு திட்டவட்டமான எல்லைகள் உண்டு. அந்த எல்லைகளுக்குள் அவரால் கெட்டித்தனமாக செயற்பட முடியும். ஆனால் அவற்றிற்கு அப்பால் அல்ல! ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுனவுடன் அவருக்கு ஏற்கனவே முறுகல் ஆரம்பித்து விட்டது ஆயினும் அவர் அதனை சமாளிப்பார்.

அவரின் ஒரே குறி, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி! இந்த சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்பு, இணைப்பாட்சி, அது இது என்றெல்லாம் அவரிடம் எதிர்பார்த்தால் அது அரசியல் அறிவீனம்.

இந்த அரசியற் சூழ்நிலையில், அடுத்தமாதம் 21 ம்திகதி இந்திய பிரதமரை ஜனாதிபதி சந்திக்கப் போகின்றார் என செய்தி வெளியாகி உள்ளது.

இந்த சந்திப்பு மிகவும் முக்கியமானது. இந்தியப் பிரதமர் மோடியுடன் புதிய சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விரும்பியிருந்த இந்த சந்திப்பு இந்திய அரசினால் இழுத்தடிக்கப்பட்டு, இப்போது தான் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது.

இந்திய பிரதமருக்கு முன்னால், ஏற்கனவே தமிழ்த் தேசியக் கட்சிகளினால் 13 வது திருத்தம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டான கோரிக்கை இருந்து கொண்டிருக்கின்றது.

13 வது திருத்தத்தை, அதன் மூல வடிவில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தான் அந்த கோரிக்கை. அந்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

சஜித் பிரேமதாச தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமன்றி ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் 13வது திருத்தத்திற்கு தமது சம்மதத்தை தெரிவித்திருக்கின்றன.

**இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்ய வேண்டியது என்ன? செய்யக் கூடியது என்ன?**

தமிழ் தேசியக் கட்சிகள் இன்று நான்கு அணிகளாக பிரிந்து நிற்கின்றன. தமிழரசுக் கட்சி இன்று தனி கடந்த ஆண்டு இறுதிவரையில் தமிழரசு கட்சியோடு இணைந்திருந்த ரெலோ, புளொட் இரண்டும், இப்பொழுது தமிழரசுக் கட்சியுடனான அரசியல் உறவு முறிந்த நிலையில், தமிழ்த் தேசியக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பனவற்றோடு கூட்டணி அமைத்து, அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பிரகடனப்படுத்தியுள்ளன.

வழக்கம் போலவே, கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் தனித்து நிற்கின்றது.

விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் தனிக் கட்சியாகவே இப்போது உள்ளது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் வேறு சில அரசியல் கட்சிகள் இயங்கிக்கொண்டிருந்தாலும், எமது அரசியல் கணிப்புக்கு இன்றைய நிலையில் அவை முக்கியமல்ல. நாம் மேலே குறிப்பிட்ட நான்கு அணிகளும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை கொண்டிருப்பவை.

தமிழர் தாயகம் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையிலும் அவை பிரிந்தே நிற்கின்றன. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர, ஏனைய மூன்று அரசியல் அணிகளும் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி வந்திருக்கின்றன.

இந்த விடயத்தில் இந்த அணிகளுக்கிடையில் அடிப்படையில் ஒற்றுமை உண்டு. அதே நேரத்தில், 13வது திருத்தம் அரசியல் தீர்வு அல்ல என்றும் அவை கூறிவந்திருக்கின்றன ஆனால் விக்னேஸ்வரன், "யார் கொடுத்த போதனையாலோ" இப்பொழுது மாகாண சபைக்கான இடைக்கால ஆலோசனை குழு அமைப்பது தொடர்பில் பேசி வருகின்றார்.

கவலைக்குரிய இந்த அரசியல் ஆச்சரியத்தை தமிழினத்தின் சாபக்கேடு என்று விட்டுவிட வேண்டியதுதான்.!

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும், அக் கட்சியின் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்டு வெற்றியீட்டி, இப்பொழுது வேறு மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, ஐந்து கட்சிகள் கொண்ட இந்த அணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பிரகடனப்படுத்தி நிற்கும், ரெலோ, புளொட் கட்சிகளின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களாக மொத்தம் 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியாக, உடனடியாக செயற்பட முன்வருவதே இன்றைய அவசிய, அவசரத் தேவை.!

பாராளுமன்றத்தில் தமிழர் தாயகமான வடகிழக்கு மாாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் பதினேழாக இருக்கையில், ஆகக் குறைந்தது இந்த பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவது, ஒற்றைக் கோரிக்கையில் ஓரணி திரண்டால், அந்த அரசியல் பலத்தை எவரும் உதாசீனம் செய்ய முடியாது. மாறாக உரிய அங்கீகாரத்தையும் மதிப்பையும் அதற்கு வழங்கியே ஆக வேண்டும்.

இச்சூழ்நிலையில், ஓரணியாக கடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இந்த பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது இன்றைய அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு 13வது திருத்தம் தொடர்பில் சந்தித்துப் பேச வேண்டும்.

இதற்கான முயற்சியையும் முன்னெடுப்பையும் பெருந்தலைவர் சம்பந்தன் மேற்கொள்ள வேண்டும். அத்துடன், இவர்கள் அனைவரும் கூட்டாக இந்தியப் பிரதமர் மோடியை, ரணில்- மோடி சந்திப்புக்கு முன்னர், சாத்தியமானால் சந்திக்க வேண்டும்.

**அரசியல் என்பது சாத்தியங்களை கையாளும் கலை. சாத்தியத்தோடு கூடிய சந்தர்ப்பம் எதிர் நிற்கையில், இப்போதைக்கு 13 வது திருத்தம் என்ற ஒற்றைக் கோரிக்கையின் அடிப்படையில் சாத்தியமான அரசியல் ஒற்றுமையை காண முயற்சிப்பதே யதார்த்த பூர்வமானதும் அறிவார்ந்ததுமான அரசியல் அணுகு முறையாக இருக்க முடியும்.**

**தமிழ்த் தேசியம் சார்ந்த தலைவர்கள் அனைவரும் பொறுப்போடு செயற்பட கடமைப்பட்டிருக்கின்றார்கள்.**

**கும் இருட்டினில் நிற்கையில், என்றோ ஒரு நாள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் மின்சார வெளிச்சத்திற்காக ஏங்கிக் கொண்டு இருக்காமல், கைவசம் இருக்கும் மெழுகுவர்த்திகளையும், குப்பி விளக்குகளையும் உடனடியாக ஏற்றி வைப்பதே புத்திசாலித் தனமானது.**

**இதனை தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் அனைவரும் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. ஏன் எனில் தொடர்ந்து துன்ப துயரங்களில் துவண்டு கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.**

பார்த்தசாரதி

# ஆரம்பமாகிறது ஜெனீவா சமர்

## இலங்கை தொடர்பான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வாய்மொழி மூல அறிக்கை 21 ஆம் திகதி



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 53வது கூட்டத்தொடர் எதிர்வரும் 19 ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.
அந்த வகையில், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வாய்மொழி மூல அறிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி அமர்வில் வாசிக்கப்படவுள்ளது.
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகியது.
அன்று இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டின் எழுத்துமூல அறிக்கை வாசிக்கப்பட்டது.
அத்துடன், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் கொண்டுவரப்பட்ட 51/1 என்ற புதிய தீர்மானம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
அதையடுத்து, இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை குறித்த விசேட தீர்மானங்களோ அல்லது விவாதங்களோ உள்ளடக்கப்படவில்லை.
இவ்வாறான சூழலில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் இந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
மேலும், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற 51/1 தீர்மானத்தின் பிரகாரம், நாட்டின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும், பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழல் மோசடிகள் என்பன மனித உரிமைகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

# காணிகளை விடுவியுங்கள்

## ஆனால் இராணுவம் வெளியேறக்கூடாது!!




இராணுவம் கையகப்படுத்திய தமிழ் மக்களின் காணிகளை மீள கையளிக்க வேண்டுமென முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் யுத்தக் காலத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களுக்கு சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இன்றும் விடுவிக்கப்படாமல் உள்ளன.
அதுபோல, வடக்குக், கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கையும் குறைந்தபாடில்லை.
இவ்வாறான நிலையில், வடக்குக், கிழக்கு மாகாணங்களில் யுத்தக் காலத்தில் இராணுவத் தேவைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட இடங்களை தெரிவு செய்து அவற்றை மீள கையளிக்க வேண்டும் என இலங்கை முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதையப் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியிருக்கிறார்.
வடக்குக், கிழக்குப் பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டும். ஒரு நாட்டுக்கு இராணுவம் தேவை. இராணுவத்துக்கு இராணுவ முகாம்கள் அவசியம். அதுபோல இலங்கை முழுவதிலும் இராணுவத்தினர் இருக்க வேண்டும் எனவும் பொன்சேகா கூறுகிறார்.
வடக்குக், கிழக்குத் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக இராணுவத்தை பலவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக எமக்கு தோன்றுகிறது. இதனை நாம் முழுமையாக எதிர்க்கிறோம் என இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# குருந்தூர் மலை, திருகோணமலை திரியாய காணி விவகாரம் : நிபுணத்துவ குழு அமைத்து விசாரிக்க ஜனாதிபதி உத்தரவு!



தொல்லியல் நடவடிக்கைகளுக்கு என கூறி முல்லைத்தீவு குருந்தூர் மலை மற்றும் திருகோணமலை திரியாய விகாரை பகுதியில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பை கோரியமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க விசேட நிபுணர் குழுவை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.
இந்த விடயம் குறித்து கடந்த வியாழக்கிழமை (15) இடம் பெற்ற கலந்துரையாடலின் போது, முல்லைத்தீவு குருந்தூர் மலை பகுதியில் 2000 ஏக்கர் நிலப்பரப்பும், திருகோணமலை திரியாய விகாரைக்கு என 3000 ஏக்கர் நிரப்பரப்பையும் தொல்பொருள் திணைக்களம் கோரியுள்ளது.
இந்நிலையில், வன வள பாதுகாப்பு திணைக்களம் உட்பட பல துறைகளுக்கு சொந்தமான பெரும் நிலப்பரப்புகளை தொல்லியல் நடவடிக்கைகளுக்கு என்று கோரப்படுகின்றமையின் அடிப்படை தன்மை குறித்து கண்டறிந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியினால் குறித்த காணிகள் தொல்லியல் நடவடிக்கைகளுக்கு என அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை தொல்லியல் பகுதிகள் எனவும் ஜனாதிபதி செயலணி உறுதிப்படுத்தியுள்ளன.
எனினும், பௌத்த தலைமைப்பீடமாக கருதப்படும் அநுராதபுரம் மஹா விகாரைக்கோ அல்லது நீர் பூங்காக்கள் நிறைந்த விசேட மரபுரிமைகளை கொண்ட சீகிரியாவுக்கு கூட இல்லாத காணிகளை, குருந்தூர் விகாரைக்கும், திரியாய விகாரைக்கும் கோருவதற்கான நோக்கத்தின் உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

# யாழை அச்சுறுத்த தொடங்கியிருக்கும் மலேரியா



இலங்கையில் மீண்டும் மலேரியா காய்ச்சல் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
அதன்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளில் **Anopheles stephensi** என்ற நுளம்புகளின் தாக்கம் இருப்பதால், மீண்டும் மலேரியா அச்சுறுத்தல் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.
சுகாதார அமைச்சின் தகவலறிந்த தகவல்களின்படி, அம்பாறை மாவட்டத்திலுள்ள, அக்கரைப்பற்று, திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் அட்டாளைச்சேனை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.
மேலும், யாழ்ப்பாணம் - பருத்தித்துறையிலும் இந்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் மலேரியா எதிர்ப்புப் பிரசாரத்தினால் 2016ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் வரை மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகளின் மூலம் 2016ஆம் ஆண்டு மன்னாரிலும் அதன் பின்னர் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் முதன்முதலில் மலேரியாவைப் பரப்பும் நுளம்புகள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஜேந்திரகுமார் மற்றும் ஏனைய தமிழ் உறுப்பினர்கள்

## கைது செய்யப்பட்டமை தொடர்பில் அமெரிக்க இராஜதந்திரிகளை அனுப்பி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆறு தமிழ் சங்கங்கள் கூட்டாக கடிதம்!!



அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் ஏனைய தமிழ் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அமெரிக்க இராஜதந்திரிகளை அனுப்பி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே பிளின் கென்னிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் அமைச்சினால் செயலாளர் பிளிங்கனுக்கு அனுப்பப்பட்ட கூட்டு கடிதத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.
இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விரோத செயற்பாடுகளை நிவர்த்தி செய்ய சரியான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்துக் கோயில்கள் உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரியச் சின்னங்களை அழிப்பதும், அதைத் தொடர்ந்து பௌத்தர்கள் யாரும் வசிக்காத தமிழ்ப் பகுதிகளில் புத்த கோயில்களைக் கட்டுவதுமாக இலங்கை பாதுகாப்புப் படையினரின் தீவிர ஆதரவுடனும் பாதுகாப்புடனும் எமக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.
தமிழர்கள் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியபோது, இலங்கை பொலிஸார் அவர்களைத் துன்புறுத்தி நான்கு பெண்கள் உட்பட ஒன்பது மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அரசியல் கட்சியின் சட்ட ஆலோசகர் சுகாஷ் கனகரத்தினம் ஆகியோரைக் கைது செய்தது. இவ்வாறு அரசியல் கட்சி உட்பட தமிழர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் குறையாமல் தொடர்கின்றன.

எனவே "கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திலிருந்து இராஜதந்திரிகளை அனுப்பி, இந்த விசாரணைகளை அவதானிப்பதன் மூலம், தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று ஆறு தமிழ் சங்கங்கள் கூட்டாக கையொப்பமிட்டு கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

# விதுர விக்கிரமநாயக்க பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் சுமந்திரன் எம்.பி!!



புத்த சாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அவர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் உள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் புதன்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மானதுங்கவின் பதவி விலகல் நாட்டில் சர்ச்சைக்குரிய சூழலை உருவாக்கியுள்ள போதிலும், ஜனாதிபதியுடன் கடந்த நாட்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் கூட அதனை நடைமுறைப்படுத்த அவர் விரும்பவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.
எவ்வாறாயினும், பொறுப்பு அமைச்சருக்கும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கும் இடையிலான பிரச்சினையே இந்த நிலைமை எனவும் அந்த பிரச்சினைகள் தமது தரப்புக்கு தொடர்பில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
வடகிழக்கு மாகாணங்களில் காணி அபகரிப்புதான் தமது கட்சியின் பிரச்சினை எனத் தெரிவித்த சபை உறுப்பினர் சுமந்திரன், விதுர விக்கிரமநாயக்கவை அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு தமது கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

### மாறுபட்ட நிலைப்பாட்டாளர்க...

தமிழ் அரசியல் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீங்கள் ஏன் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்தீர்கள்? ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் அதற்கு எதிர்மறையாகக் கருத்து வெளியிடவில்லையா? என்று எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்துள்ள பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

அனைத்துத் தமிழ்த்தேசிய கட்சிகளும் 13 ஆவது திருத்தத்தின் உடனடி அமுலாக்கத்துக்கு இணங்கியுள்ளன. தமிழ் காங்கிரஸ் மாத்திரமே அதனை நிராகரித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் காங்கிரஸ் உள்ளடங்கலாக பதிவுசெய்யப்பட்ட 13 தமிழ் கட்சிகள் உள்ளன.

தமிழ் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய 12 கட்சிகளில் 7 கட்சிகள் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வாக இல்லாவிட்டாலும்கூட 13 ஆவது திருத்தத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று ஆவணமொன்றில் கையெழுத்திட்டு, ஜனாதிபதியிடம் கையளித்துள்ளன. 8 ஆவது கட்சி குறித்த ஆவணத்தில் கையெழுத்திடாவிட்டாலும், அதற்கு இணங்கியுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய எஞ்சிய 4 கட்சிகளும் ஜனாதிபதிக்கான கடிதத்தில் கையெழுத்திடாவிடினும், அக்கட்சிகள் இதே கோரிக்கையை முன்வைத்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தன.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இந்திய பிரதமர் தலையிடவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும் என்ற விருப்பம் 12 கட்சிகளுக்கும் பொதுவானதாகும்.

தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு என்ற விடயத்தில் அனைத்துத் தமிழ்த்தேசிய கட்சிகளும் சமஷ்டி முறையின் வடிவங்களைத் தமது இறுதி இலக்காகக் கொண்டிருக்கின்றன. தமிழ் காங்கிரஸ் உள்ளடங்கலாக எந்தவொரு கட்சியும் பிரிவினையைக் கோரவில்லை. ஆகவே அரசியலமைப்பில் ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ள சரத்தின் அமுலாக்கத்தை முன்னிறுத்தி அரசாங்கத்துடன் ஒருங்கிணைவதை ஏனைய தமிழ் கட்சிகள் விரும்பத்தகாத விடயமாக நோக்கக்கூடாது.

தம்மில் இருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களை துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவராகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதொவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டது. குறித்தவொரு நபர் எமது நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், அவர் என்ன கூறுகின்றார் என்பதைப் புரிந்துகொள்வதற்குப் பொறுமை அவசியமாகும். மாறாக அத்தகைய மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாக சித்தரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றது

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் புத்திஜீவிகள் எமது அரசியல் இலக்குகள் எத்தகையதாக அமையவேண்டும் என்ற கருத்தாடலையும் தர்க்கத்தையும் எம் மக்கள் மத்தியில் உருவாக்குவது பெரிதும் பயனுடையதாக அமையும். சமஷ்டி முறைமையைப் பரிந்துரைப்பவர்கள், அதனை ஆதரிப்பதற்கான விடயங்களைக் கொண்டிருப்பர். இருப்பினும் சமஷ்டியை பிரிவினை என்று நம்பும் சிங்கள பேரினவாத அரசாங்கத்துக்கு, இதுகுறித்து பொறுமையாக அறிவூட்டவேண்டும். எனவே 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதென்பது இப்பாதையை நோக்கிய முதற்படியாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

# தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்பதை

## இங்கிலாந்து முறையாக அங்கீகரிக்க வேண்டும் : பிரித்தானிய பாராளுமன்றில் ஒலித்த குரல்





இலங்கையில் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்பதை இங்கிலாந்து முறையாக அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை தடுத்து நிறுத்தக் கோரியும் பிரித்தானியாவில் நேற்றைய தினம் சிறப்பு மாநாடு ஒன்று இடம்பெற்றது.

தமிழர் தாயகத்தில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு எனும் கருப்பொருளில் பிரித்தானியாவின் மனித உரிமைகள் தொடர்பிலான வழக்கறிஞர் பற்றிக் லூயிஸ் தலைமையில் பிரித்தானிய பாராளுமன்றின் சிறப்பு மண்டபத்தில் இடம்பெற்ற இம்மாநாட்டில் தாயகத்து அரசியல் செயற்பாட்டாளர்கள், பிரித்தானிய அனைத்து கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் பிரித்தானிய தமிழ் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதில் தாயகத்திலிருந்து வருகை தந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் சட்டத்தரணி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான வி.எஸ்.எஸ்.தனஞ்சயன் ஆகியோர் சிறிலங்காவில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவழிப்பு தொடர்பிலும் அவற்றிற்கு சர்வதேச தீர்வை எவ்வாறு அணுகுவது தொடர்பிலும் சிறப்புரைகள் ஆற்றினர்.

இந்நிலையில் இம்மாநாட்டிற்காக தாயகத்திலிருந்து வருகை தந்து சிறப்புரையாற்றிய சட்டத்தரணி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் தொடரும் இராணுவ மயமாக்கல், பௌத்த மயமாக்கல் மற்றும் காணிகள் அபகரிப்பு தொடர்பில் உரையாற்றினார்.

இதில் போர் நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகள் ஆன போதிலும் வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் நிலை உயர்மட்டத்திலேயே காணப்படுவதாக கூறினார். குறிப்பாக அடையாளம் நிறுவனத்தின் அறிக்கையின்படி இரு பொதுமகனுக்கு ஒரு இராணுவவீரர் என்ற நிலையில் முல்லைத்தீவில் இராணுவமயமாக்கல் அதிகரித்த நிலையிலேயே இருப்பதாக விசனம் தெரிவித்தார். அதேவேளை இராணுவத்தினர் தனியார்



காணிகளை அபகரிப்பது மட்டுமல்லாது அவர்களே விவசாயங்களை அக்காணிகளில் செய்வதாகவும் தெரிவித்தார். இதனால் வடக்கு கிழக்கில் மக்கள் பொருளாதாரமும் பாரிய நெருக்குதலுக்கு உள்ளாவதாக கூறினார்.

அதேவேளை குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலான வழக்கினை முன்னெடுப்பவர் என்ற வகையில் அங்கு மேலதிகமாக எந்தவித கட்டுமாண பணிகளையும் செய்யக்கூடாது என முல்லைத்தீவு நீதிமன்றினால் 3 தடவைகள் ஆணை பிறப்பிக்கப்பட்ட போதிலும் அதனையும் மீறி இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் அங்கு பௌத்த விகாரை கட்டுமானப்பணிகள் இடம்பெற்று நிறைவுறும் நிலையை எட்டியுள்ளதாக கூறினார்.

அத்துடன் வடக்கு கிழக்கில் இயங்கும் அரச நிறுவனங்களும் ஒரு தலைப்பட்சமாக இயங்குவதாகவும் குற்றம் சாட்டினார். குறிப்பாக தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரசபை தன்னிச்சையாக அரசுக்கு சார்பாகவே வடக்கு கிழக்கில் இயங்குவதாகவும் அவர்களே காணிகளை அபகரிப்பதற்கு முன்னிற்பதாகவும் கூறினார்.

இதனைத்தொடர்ந்து தாயகத்திலிருந்து இம்மாநாட்டிற்காக வருகை தந்திருந்த தவத்திரு வேலன் சுவாமிகள் தனது சிறப்புரையில் பௌத்த மயமாக்கல் என்னும் பெயரில் வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் திட்டமிட்ட இனவழிப்பு நடைபெறுகின்றது. அதேவேளை இவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர் நேரடியாகவே கைதுகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள் என கூறினார்.

தமிழர் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மத குருக்களோ எவராக இருந்தாலும் நீதிமன்றின் எந்தவொரு பிடியாணையும் பெறாது கைதுசெய்யப்படும் நிலமையே வடக்கு கிழக்கில் நிலவுவதாக அவர் இம்மாநாட்டில் பிரித்தானிய எம்.பி.க்களிடம் தெரிவித்தார்.

இறுதியாக பௌத்த மயமாக்கல் எனும் பெயரில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனப்படுகொலையை பிரித்தானியா தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கனடாவை பின்பற்றி பிரித்தானியாவும் தமிழர்களுக்கு எதிராக தாயகத்தில் இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலையே என்பதை அங்கீகரிக்க வேண்டும் எனவும் அவர் இம்மாநாட்டின் ஊடாக பிரித்தானிய அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை முன்வைத்தார்.






இப்பத்திரிகை 16.06.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.